# விடுதலைப்புலிகள்

குரல் : 52 | ஐப்பசி - கார்த்திகை 1994 | அன்பளிப்பு: ரூபா 5/-


# சமரச முயற்சியில் இந்தியாவின் குறுக்கீடு:

# சந்திரிகா செய்யப்போவது என்ன?

**பு**லிகள் இயக்கத்திற்கும் சந்திரிகா அரசுக்குமிடையில் நல்லெண்ணமேற்பட்டு, சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதையோ, தமிழரின் இனப்பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதையோ இந்திய அரசு விரும்பவில்லை.

இதன்காரணமாக அரசு – புலிகள் சமரசமுயற்சிக்கு முட்டுக்கட்டை போடுவதில், இந்திய அரசும் அதன் புலனாய்வு நிறுவனமான 'றோ' வும மறைமுக முயற்சிகளில் ஈடுபட்டபடியுள்ளன.

ஈழத்தமிழர்களுக்கென ஒரு தனி அரசு அமைவதை மட்டுமல்ல, அமைதிப் பேச்சின்மூலம் ஒரு நல்ல தீர்வு ஏற்பட்டு, வட - கிழக்கு மாநில ஆட்சி புலிகள் இயக்கத்தின் கைகளுக்குச் செல்வதையும் இந்திய அரசு விரும்பவில்லை.

இதற்கு ஆழமான ஒரு காரணி உண்டு. காலங்காலமாக இந்திய ஆளும்வர்க்கத்திடம் இருந்துவரும் தமிழ்த் தேசிய எதிர்ப்புணர்வு தான் அந்தக் காரணமாகும்.

இங்கேயும் ஒரு தமிழ்த் தேசியம் ஆழமாக வேர்விட்டு வளர முனைவதை, இந்திய அரசால் சகித்துக்கொள்ள முடியவில்லை. எனவேதான், தமிழ்த் தேசிய உருவாக்கத்திற்குக் காரணியாக இருக்கும் புலிகள் இயக்கத்தை, இந்திய அரசு தனது எதிரியாகக் கருதுகின்றது. சமரசப் பேச்சுவார்த்தைமூலம் புலிகள் இயக்கத்திற்கு அரசியல் முக்கியத்துவம் கிடைப்பதையோ, புலிகள் இயக்கத்தின் கைகளில் ஆட்சி அதிகாரம் சென்றடைவதையோ இந்திய அரசு விரும்பவில்லை! எனவேதான், அரசு - புலிகள் பேச்சுவார்த்தையைக் குழப்ப, திரைமறைவில் பகீரத முயற்சிகளை அது எடுக்கின்றது.

கடந்த ஓகஸ்ற்றில் நாடாளுமன்றத் தேர்தலை வென்ற சந்திரிகா அம்மையார் புலிகள் இயக்கத்துடன் பேச முடிவெடுத்ததைத் தொடர்ந்து, தனது தூதுவர் ஒருவர்மூலமாக 'புலிகளை நம்பக் கூடாது' எனச் செய்தி அனுப்பி, அரசு - புலிகள் பேச்சிற்கு மறைமுகமாகத் தனது எதிர்ப்பை அது காட்டியது.

அத்துடன், சிங்களப் பேரினவாத சக்திகளையும் போராட்ட விரோத சக்திகளையும் இரகசியமாகச் சந்தித்து, அரசு - புலிகள் பேச்சிற்கு இடையூறு ஏற்படுத்தும்படி தூண்டிவருவதாகவும், சில செய்திகள் தெரிவிக்கின்றன.

அதுமட்டுமல்ல, தமிழர் தாயகத்தில் ஊடுருவல் செய்து, நாசகார வேலைகளைப் புரிந்து போராட்டத்தை நசுக்குவதற்கும், இந்திய புலனாய்வு நிறுவனமான 'றோ' இரகசிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.


சந்திரிகா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைக்கு இந்திய அரசு மறைமுகமாகத் தடைபோட முனைகின்றது என்ற உண்மையை, சண்டே ரைம்ஸ் (13. 11.94) பத்திரிகையும் ஒரு கட்டுரை வாயிலாகச் சுட்டிக் காட்டியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவை இந்தியாவுக்கு அழைத்து, பேச்சுவார்த்தை சம்பந்தமாக சில அழுத்தங்களை இந்திய அரசு திணிக்கலாம் என்றும், சந்தேகிக்க இடமிருக்கின்றது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே


* *சிறப்பம்சம்:* விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்
* *காமினி திசாநாயக்கா:* ஒரு பேரினவாதியின் அவலச் சாவு
* *இயல்புநிலையைத் தோற்றுவித்தல்: பேச்சுக்களை ஆரம்பித்தல்:* சந்திரிகாவின் அரசு தயங்குவது ஏன்?

எங்களின் குரலெழுந்து கூவிய முதற்பெண் கரும்புலி தங்கையின் சுவடெடுத்து விரைந்த கடற்பெண், தளபதி அன்னவர் 'பெருமிதங்க ளோ'டெங்கள் தேசத்தின் அதிபதி

கரும்புலிகள் : தேசத்தின் அசுர பலம்.
முதற் பெண் கடற் கரும்புலியான கப்டன் அங்கயற்கண்ணி, தலைவர் அவர்களோடும் தன் தளபதிகளான திரு. சூசை, லெப். கேணல் நளாயினி ஆகியோரோடும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

## புலிகளின் குரல்

# இயல்பு நிலையைக் கொண்டுவர இனி என்ன தடை?

சமாதானப் பாதைக்கு இடையூறாக இருந்த எஞ்சிய ஒரு தடைக்கலலும இப்போது அகற்றப்பட்டுவிட்டது. நிறைவேற்று அதிகாரங்கொண்ட சிறீலங்காவின் ஜனாதிபதிப் பதவியை திருமதி சந்திரிகா குமாரதுங்கா கைப்பற்றியதன் மூலம் அதைச் சாதித்துள்ளார்.

புலிகள் இயக்கத்துடன் பேசி இனப்பிரச்சினையைச் சமாதான வழிமுறையில் தீர்க்சவேண்டும் என்ற சந்திரிகாவின் அரசியல் நிலைப்பாட்டை, சிங்கள மக்கள் மேலும் பலப்படுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தல்மூலம் முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்ட சிங்கள மக்களின் இந்த மனமாற்றம், ஜனாதிபதித் தேர்தலில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இனிமேல், சமாதானப் பேச்சுக்களை வெற்றிகரமாக நடாத்துவதற்கு எந்த ஒரு தடையும சந்திரிகா அரசுக்கு இருக்கப் போவதில்லை. சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களுக்கும இது மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் தரும் செய்தி என்பதில் ஐயமில்லை. ஸ்தம்பித நிலையிலுள்ள சமாதானப் பேச்சுக்கள் மீணடும் தொடரவேண்டும் என்பதே, தமிழீழ மக்களினதும் விருப்பமாகும்.

காத்திரமான முறையில் சமாதானப் பேச்சுக்களை நடாததுவதற்கு போர்நிறுத்தம் ஒன்றின் தேவைபற்றி, தலைவர் பிரபாகரன் பல தடவைகள் வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆனால், இராணுவத்தரப்பிலிருந்துவந்த எதிர்ப்புகள் காரணமாக, சந்திரிகா அம்மையார் அப்போது போர்நிறுததம் தொடர்பாகத் தயக்கம் காட்டி வந்தார் அவரது தயக்கத்திற்குப் பிரதான காரணம், இராணுவத்தைக் கட்டுப்படுத்தும் அத்காரம் அவரிடம் இல்லாதிருந்ததுதான். ஆனால் இப்போது, நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிப் பதவி சந்திரிகா குமாரதுங்காவின் கைகளிலேயே உள்ளது. எனவ, ஒரு போர்நிறுத்தத்தைப் ப்ரகடனபபடுத்தி பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கி, சமாதானப் பேச்சுக்களை வெற்றிகரமான முறையில் தொடர்வதற்கு, சந்திரிகா அம்மையாருக்கு எந்தத் தடையும் இல்லை; மிகவிரைவில் அதைச் செய்வார் என்று தமிழீழ மக்களும் எதிர்பார்க்கின்றனர்.

புலிகள் இயக்கம் ஏற்கெனவே கூறியதுபோல, பேச்சுவார்த்தைக்குரிய விடயங்களை இருபகுதிகளாக வகுத்து, ஒன்றன்பின் ஒன்றாக அவற்றை அமுலபடுத்த முயல்வது, நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கும். அதாவது, அன்றாடப் பிரச்சினைகள் - அடிப்படைப் பிரச்சினைகள் என்று வகுத்துவிட்டு, முதலில் தமிழ் மக்கள் சந்திக்கும் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்க முயல்வது, போர் சுமத்திய உடனடிப் பளுவிலிருந்து மக்கள் மீள்வதற்கு உதவி புரியும்.

நாடாளுமன்றத் தேர்தலில வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சந்திரிகா அரசு, வடபகுதி மக்கள் மீதான பொருளாதாரத் தடையை சிறிது தளர்த்தியமை எல்லாரும் அறிந்ததே. ஆனால், யாழ்ப்பாணத்திற்கான பிரயாணப்பாதை ஒன்று திறக்கப்படாமையால், தளர்த்தப்பட்ட தடையின் பயனை வடபகுதி மக்களால் அனுபவிக்க முடியவில்லல. இந்த நிலையிலேயே, பூநகரியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை விலக்கி கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிட்டு, வடபகுதி மக்களின் பொருளாதாரச் சுமையைக் குறைக்க முயல வேண்டும் என்று, புலிகள் இயக்கம் அரசைக் கேட்டிருந்தது. அப்போது இராணுவம் அதற்கு உடன்பட மறுத்ததாலும இராணுவத்திற்கு உத்தரவிடும் அதிகாரம் சந்திரிகாவின் கைகளில் இல்லாதிருந்ததாலும், அதை நிறைவேற்ற முடியாது போய்விட்டது. ஆனால் இப்போது, பூநகரி இராணுவ முகாமை அகற்றி கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து, வடபகுதி மக்களுக்குத் தனது நல்லெண்ணத்தைக் காட்டுவதற்கு, சந்திரிகா அரசுக்கு எந்தத் தடையும் இல்லை.

சிக்கலானதும் நீண்ட வரலாற்றைக் கொண்டதுமான தமிழரின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக, ஒரு தீர்வுத்திட்டமொன்றை வழங்கத் தயாராக உள்ள சந்திரிகாவின் அரசுக்கு, அந்தத் தீர்வை நடைமுறைச் சாத்தியமுள்ளதாக மாற்றும் வகையில் போர்நிறுத்தம் செய்வதும் - ஒரு இராணுவ முகாமை அகற்றி பிரயாணப் பாதை ஒன்றைத் திறந்துவிடுவதும் - பொருளாதாரத் தடையை முழுமையாக நீக்கிவ்டுவதும் - கடினமான செயலாக இருக்கமாட்டாது. ஜனாதிபதி சந்திரிகா இதை உடனடியாகவே கருத்தில் எடுப்பார் என்று, தமிழீழ மக்களும் நம்புகின்றனர்.

இதேவேளை, சமாதானத்தின் பாதையில் உறுதியுடன் அடியெடுத்து வைப்பதற்குப் பதிலாக, 'போர்நிறுத்தம் செய்தால் புலிகள் பலம் பெற்று விடுவார்கள்' என்றோ, 'பிரயாணப் பாதை திறந்தால் புலிகள் பயனடைந்து விடுவார்கள்' என்றோ இராணுவ ரீதியில் சிந்திக்க முயல்வது. அமைதிப் பேச்சுக்கு மறைமுகமாகப் போடப்படும் தடையாகவே இருக்கும். அதேவேளை, வட அயர்லாந்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுடனும், பலஸ்தீனத்தில் நிகழும் அமைதிப் பேச்சுடனும் ஒப்பிட்டு, அதனடிப்படையில் தமிழரின இனப்பிரச்சினைக்கான அணுகுமுறைகளை வகுக்க முயல்வதும் விவேகமான சிந்தனை முறையாக இருக்கமாட்டாது.

சாதகமான இந்தப் புறச்சூழலைஅரசு சரியான முறையில் பயன்படுத்தப் போகின்றதா அல்லது அதீத எச்சரிக்கையுடன் இருந்து போட்டுடைக்கப் போகின்றதா என்பது, சந்திரிகா அம்மையாரின் கைகளிலேயே உள்ளது. ○

# வெற்றிலைக்கேணி அதிரடி!

வெற்றிலைக்கேணி தரை - கடற் படைகளின் கூட்டுத்தளத்தின் பணி முக்கியமானது.

தமிழீழ தாயகத்தின் தொண்டைக்குள் செருகப்பட்ட முள்ளான ஆனையிறவுப் பெருந்தளத்தின் விநியோக வாயில் அதுதான்.

முள்ளியான், புல்லாவெளி, கொம்படி, இயக்கச்சி என வெற்றிலைககேணியிலிருந்து அதன் விநியோகக் கால்வாய், ஆனையிறவு வரை 9கி. மீ. நீள்கின்றது.

வெற்றிலைக்கேணித் தளம், ஆனையிறவுப் பெருந்தளம் இரண்டையும் இணைக்கும் பாரிய 'இராணுவ வேலி' என்ற இந்தப் 'படை வலயம்' நிகழ்காலத்தில் முக்கியத்துவம்வாய்ந்த ஒன்றாகிறது.

அதாவது - போராட்டத்தை நலிவடையச் செய்ய, யாழ். குடாநாட்டை முற்றுகையிட்டு முடக்குவகைத் தந்திரோபாயமாகக் கொண்டு - தான் வரைந்த ஒரு போர்முறைத் திட்டத்தை நடைமுறைபபடுத்தும்போது எதிரி செய்த, முதலாவதும் பிரதானமானதுமான நகர்வு இந்தப் 'படை வலய'மாகும்.

ஆனபடியால், 08 - 11 - 1994 அன்று, வெற்றிலைக்கேணியில் தொடுக்கப்பட்ட கரும்புலித் தாக்குதல் ஒரு உயர்ந்த இராணுவ பரிமாணத்தைப் பெறுகின்றது.

'பபதா' என்று பெயருடைய 'தரையிறங்கும் கடற்கலம்', யுத்தக் கருவிகளையும் போர்வீரர்களையும் விநியோகித்துக் கொண்டிருந்த போது -

அதனை வளைத்து ஓடியபடி - 'டோறா' சண்டைப் படகுகளும், 'சவட்டன்' ரோந்துப் படகுகளும் காவல்செய்த வேளை -

பூநகரியிலிருந்து எடுத்துவந்த விசைப்படகுகளில் கடற்புலிகளின் அதிரடிப்படையினர் புகுந்து தாக்கிய நேரம் -

அதிகாலை இரவு 12. 55 மணி. மூர்க்கத்தனமான தாக்குதல் மூன்று மணி நேரம் நீள -

ஆவேசமான பாய்ச்சலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல், காவற் படகுகள் தப்பித்து ஓட -

கப்பலிலிருந்து முழங்கிய சுடுகருவிகளின் கடும் எதிர்ப்பை ஊடறுத்து விரைந்து நெருங்கிய கரும்புலி வித்தி - சொல்லப்பட்ட இடத்தில் மோதினான்.

பாரிய சேதமடைந்த அந்த 'தரையிறங்கு கலம்' கடற்கரையில் படுத்தபடியுள்ளது.

போருக்குத் தயாரான ஏற்பாடுகளுடன் கூடிய 600 துருப்புக்களைக் காவியபடி, மணிக்கு 8 கடல் மைல் (15 கி. மீ.) வேகத்தில் செல்லக் கூடிய இக்கப்புல் சேதமாக்கப்பட்டதானது, சிங்களக் கடற்படைக்கு சொல்லிக்காட்டக்கூடிய ஒரு இழப்பு ஆகும்.



**மேஜர் வித்தி**

சந்தனம் யோகேஸ்வரன்

நாகர்கோவில் - யாழ்.

05.10.1971 - 08.11.1994

# விடுதலைப் போரின் இறுதிவெற்றியை உறுதிசெய்யும் கடற்போர்



**விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் : அசையாத நம்பிக்கை**
**சிறப்புத் தளபதி சூசை, கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி மாதவி ஆகியோர் தலைவர் அவர்களுடன்.**

*'ஈழப்போர் – 2' இன் ஆரம்பத்துடன் கடற்போரும் ஆரம்பமாகிவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்த இந்தக் கடற்போர் இப்போது, போராட்டத்தின் இறுதி வெற்றியை உறுதிப்படுத்தும் ஒரு விடயமாக மாறி விட்டது.*

*கடந்த மூன்று மாதங்களில் கடற்புலிகள் நடாத்திய கப்பல் தகர்ப்புகளை இந்தக் கட்டுரை மதிப்பீடு செய்கின்றது.*

*இதுவரைகாலமும் வடகடல் பிராந்தியத்தில் நடைபெற்ற கடற் சண்டைகளுக்கு அப்பால் இப்போது ('சாகரவர்த்தனா' தகர்ப்புடன்), மேற்குக் கடல் பிராந்தியத்திலும் ஒரு புதிய போர்முனை திறந்துவைக்கப்படுகின்றது என்பதையும், அது தமிழீழ விடுதலைப் போரில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்களையும் இக்கட்டுரை விளக்குகின்றது.*

*இந்தப் புதிய கடற் போர்முனை பெண் கடற் கரும்புலிகளின் தலைமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது என்பது, உலகெங்கும் இல்லாத ஒரு புதிய வரலாறு என்பதையும் இக்கட்டுரை சுட்டிக் காட்டுகின்றது.*

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை அதன் தலைவிதியைக் கடற்போர்தான் நிர்ணயிக்கப்போகின்றது.

இத்தகையதொரு கடற்போரே யாழ். குடாநாடு மீதான சிங்களப் படை இட்ட முற்றுகைக்கும் முடிவுகட்டியிருந்தது.

கிளாலிக் கடல்நீரேரி கடற்புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வந்தபின் கடற்போர் கண்ட புதிய பரிமாணத்தின் காரணமாக, விடுதலைப் போராட்டமும் ஒரு படிநிலை வளர்ச்சியைச் சந்தித்தது.

அதேபோல, காங்கேசன்துறையில் மூழ்கடிக்கப்பட்ட கண்காணிப்புத் 'தாய்க்கப்பல்' மற்றும் 'சாகரவர்த்தனா'வின் மூழ்கடிப்புடனும், வெற்றிலைக்கேணியில்ஒரு விநியோகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாலும் கடற்போர் மேலும் ஒரு புதிய பரிமாணத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியுள்ளது. அதாவது, ஆழ்கடலிலும் சிங்களக் கடற்படையை அச்சுறுத்தும் வகையில் - அதற்குச் சவாலாக - கடற்புலிகள் மாறத் தொடங்கிவிட்டனர் என்பதுவே, வரவிருக்கும் அப்புதிய பரிமாணமாகும்.

இந்த ஆழ்கடற் சவாலைத் தொடக்கிவைத்ததில் பெண் கடற்புலிகளின் பங்கு மிக முக்கியமானதாக அமைந்துவிட்டது. இது உலகில் எங்கும் காணமுடியாத வரலாறு. இந்தப் புதிய வரலாற்றைப் படைத்த பெண் கடற் கரும்புலிகளின் வீரச் செயலும் - உயிர் அர்ப்பணிப்பும் போர் அரங்கில் மட்டுமல்ல, சமூக அரங்கிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

அடுக்களையுடன் தடுக்கப்பட்டிருந்த பெண்களின் சமூகப் பொறுப்பு, ஆழ்கடல்வரை சென்று ஒரு தேசியக் கடமையை நிறைவேற்றும் அளவுக்கு விரிவு கண்டுள்ளது. தமிழீழப் பெண்களின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரளயத்திற்கு அத்திவாரமிட்டு - ஆசீர்வதித்த பெருமை, தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும்.

இரண்டாவது ஈழப்போரில் - வடதமிழீழத்தைப் பொறுத்தவரை வெற்றிகளைப் பெற்றுக்கொடுக்கும் பிரதான ஊடகமாக, இருபகுதியினருக்கும் பெரும்பாலும் கடலே இருந்துவந்துள்ளது.

கடல்வழித் தொடர்பற்ற படைமுகாம்கள் அழிக்கப்பட்டதும்...... கடல்வழித் தொடர்பு கிடைத்ததன் காரணமாக ஆனையிறவுத் தளம் தப்பிப் பிழைத்ததும்......அத்துடன் குடாநாடு மீதான முற்றுகையை முறியடித்த கிளாலிக் கடற் சண்டைகள் மற்றும் கட்டைக்காடு, 'தவளை'த் தாக்குதல், பலாலித் தளத்தின் கிழக்குப் பகுதிமீது நடந்த தாக்குதல் என்பவற்றுடன், தீவகம் மற்றும் மன்னார்த் தீவுக்குள் நடந்த தாக்குதல்கள்......என்று, அச்சண்டைகளின் வெற்றி தோல்வியை நிர்ணயித்த முக்கிய ஊடகமாக கடற்பரப்பே இருந்துவந்திருக்கின்றது.

இந்தக் கடற்பரப்பு ஆழங்குறைந்த கடல் (Inshore), ஆழ்கடல் (Offshore) என்று இரண்டு வகையாகவும் - அவ்வவ் வகைக்கேற்ப இருவேறு இராணுவ பரிமாணங்களுடனும் இருக்கின்றது.

ஆழங்குறைந்த கடற்பரப்பிற்குள் கடற்படையின் பாரிய போர்க்கப்பல்கள் மற்றும் 'டோறா' சண்டைப் படகுகள் உள்நுழைய முடியாததால், சிங்களக் கடற்படையானது தனது பலத்தை முழுமையாக இங்கே காட்ட முடியாது. இது ஒரு வகை இராணுவ பரிமாணம்.

கிளாலிக் கடல்நீரேரி ஆழங்குறைந்த கடற்பரப்பில் அடங்குகின்றது. எனவே மட்டுப்படுத்தப்பட்ட பலத்துடன் கிளாலிக் கடல்நீரேரியில் - அதாவது ஆழங்குறைந்த கடலில் - நிலைகொண்டிருந்த கடற்படையுடன் மோதி கடற்புலிகள் பெற்ற வெற்றியானது, கடற்போரின் ஒருவகை இராணுவ பரிமாணத்தை வெற்றிகொண்டதற்குச் சமனாகும்.

அடுத்த இராணுவப் பரிமாணம் ஆழ்கடற் போரில் அடங்கியிருக்கின்றது. சிங்களக் கடற்படையின் முழுப்பலத்தையும் சந்திக்கவேண்டிய ஒரு சண்டைக்களமாக, ஆழ்கடற் போர்முனை அமைந்துள்ளது.

ஆழ்கடற் போர்முனையைப் பொறுத்தளவில் சிங்களக் கடற்படையானது, நான்கு பிராந்தியங்களாக இலங்கையின் கடற்பரப்பை வகுத்து வைத்திருக்கின்றது. அவையாவன: வடகடற் பிராந்தியம், கிழக்குக் கடற் பிராந்தியம், மேற்குக் கடற் பிராந்தியம், தெற்குக் கடற் பிராந்தியம்.

இதில் வடகடற் பிராந்தியம் முழுமையாகவும், கிழக்குக் கடற் பிராந்தியத்தில் மிகப் பெரும்பாலான கடற்பரப்பும், மேற்குக் கடற் பிராந்தியத்தில் கணிசமான கடற்பரப்பும் தமிழீழக் கடற்பரப்புக்குள் அடங்குகின்றன.

தமிழீழம் என்பது நிலப்பரப்பை மட்டும் உள்ளடக்கிய விடயம் என்று பலரும் கருதுவது தவறு. தரையைப்போல பிரமாண்டமான ஒரு கடற்பரப்பையும் கொண்டமைந்ததுதான் எங்கள் தமிழீழத் தாயகம். இன்னும ஒருபடி மேலே சென்று சொல்லப்போனால், எமது தாயகத்தில் நிலப்பரப்பைவிட கடற்பரப்பின் விஸ்தீரணம் அதிகமானது என்ற பேருண்மையை, எமது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய 1200 கி. மீற்றர் நீளமான கடற்கரையைத் தமிழீழம் கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டின் கடற்கரையிலிருந்து 19 கி. மீற்றர் தூர கடற்பரப்பு, குறித்த அந்த நாட்டிற்குச் சொந்தமானது என்று, சர்வதேச சட்டங்கள் வலியுறுத்துகின்றன. இதன்படி ஏறக்குறைய 23,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவான கடற்பரப்பு தமிழீழத் தாயகத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றது. அதேவேளை தமிழீழத்தின் நிலப்பரப்பு ஏறக்குறைய 19,000 சதுர கி. மீற்றர் ஆகும். எனவே தமிழீழத் தாயகத்தைப் பொறுத்தவரை கடற்பரப்பில்தான் அதன் பெரும்பகுதியுள்ளது. இக் கடற்பரப்பை நாம் வெறறி கொண்டேயாகவேண்டிய அவசியத்தை இப்போது உணரக்கூடியதாக உள்ளது அல்லவா.....?

ஆழ்கடற் போர்முனையைப் பொறுத்தவரை இதுவரை காலமும் (கடந்த நான்காண்டுகள்), பல கரும்புலித் தாக்குதல்கள்மூலம், சிங்களக் கடற்படைக்குக் கணிசமான சேதத்தைக் கடற்புலிகள் ஏற்படுத்தியிருந்தனர்.

அதிலும் குறிப்பாக கடந்த மூன்று மாதங்களில், அடுத்தடுத்து மூன்று பெரிய கப்பல்களை மூழ்கடித்த கடற்புலிகள், என்றுமில்லாதவாறு ஆழ்கடலில் சிங்களக் கடற்படைக்குச் சவாலாக மாறிவிட்டனர்.

அத்துடன் இந்த ஆழ்கடற் போர் தொடர்பான ஒரு புதிய போக்கையும் காணக்கூடியதாக உள்ளது. 'சாகரவர்த்தனா' தவிர மிகுதி அனைத்து ஆழ்கடற் தாக்குதல்களும், வடகடற் பிராந்தியத்திலேயே நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் 'சாகரவர்த்தனா' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல், மேற்குக் கடற் பிராந்தியத்தில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

வடகடலில் மட்டும் நடந்துவந்த ஆழ்கடற் சண்டைக்கு அப்பால் இப்போது, மேற்குக் கடற் பிராந்தியத்திலும் ஒரு புதிய போர்முனையைக் கடற்புலிகள் திறந்துவைத்துள்ளனர். இந்தக் களமாற்றம் என்றுமில்லாத வகையில், அரசுக்குப் பெரிய தலையிடியையும் எதிர்காலம் தொடர்பான அச்சத்தையும் கொடுத்துள்ளது.

ஏனெனில், இந்த மேற்குக் கடற் பிராந்தியத்தால்தான் சிறீலங்காவின் பொருளாதார உயிர்நாடி அமைந்திருக்கும் கொழும்புத் துறைமுகம் உள்ளது.

'சாகரவர்த்தனா' மூழ்கடிக்கப்பட்ட கற்பிட்டிக் கடற் பரப்பிலிருந்து கொழும்புத் துறைமுகப் பகுதிவரை உள்ள தூரம், ஏறக்குறைய 150 கி. மீற்றர் ஆகும். கற்பிட்டியிலிருந்து இரு மணிநேர விசைப்படகு ஓட்டத்தில், கொழும்புத் துறைமுகப் பகுதியைக் கடற்புலிகளால் அடைய முடியும் (இலங்கை வரைபடத்தைப் பார்க்கவும்) இந்தத் தகவல்கள் நிச்சயம் சிங்கள அரசைக் கனவிலும் அச்சுறுத்தக்கூடியவை.

வடகடலில் நடக்கின்ற சண்டைகள் பற்றி அரசு பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை; அதற்குக் காரணம் அது கொழும்பு அரசியலை உலுக்குவதில்லை ஆனால் இனிமேல், மேற்குக் கடற் பிராந்தியத்தில் தொடரப்போகும் ஒவ்வொரு கடற் சண்டையையும் சிங்கள அரசின் முற்றத்தில் நடப்பதுபோன்றே, அது உணர வேண்டி வரும். மேற்குக் கடற் பிராந்தியத்தின் மீன்பிடித் தொழிலில் நிச்சயம் இது ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்; அதனால் சிங்கள மீனவர்களின் ஜீவனோபாயம் பாதிக்கப்படும்போது, தமிழ் மீனவர்களை அசட்டை செய்ததுபோல மெத்தனமாக இருக்கமுடியாது. அது சிங்கள தேசத்தின் அரசியலை - பொருளாதாரத்தை - பாதிக்கக்கூடிய ஒரு பெரிய விடயமாகவே இருக்கும்.

அதேவேளை வடபுலத்திலுள்ள படைமுகாம்களிற்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், கணிசமானளவு மேற்குக் கடற்பிராந்தியத்தினூடாகவே நடைபெறுகின்றது என்பதும் கவனிக்கத்தக்கது. 'சாகரவர்த்தனா' வின் தகர்ப்பிற்குச் சில நாட்கள் முன்னர், மன்னார்த் தீவில் நிலைகொண்டிருக்கும் படையினர்க்கு 'றோளர்'கள்மூலம் நடந்த உணவு விநியோகத்தை, கடற்புலிகள் தடுத்து நிறுத்தி இருந்தனர். அத்துடன் 'சாகரவர்த்தனா' தாக்கப்பட்ட பின்னர், மன்னர்த்தீவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர்க்கான உணவு விநியோகமும் பாதிப்படைந்ததைக் கொழும்புப் பத்திரிகைகள் சுட்டிக்காட்டியிருந்தன. மேற்குக் கடற் பிராந்தியம் ஒரு சண்டைக் களமாக மாறுமாக இருந்தால் கடல் விநியோகங்களுக்கு என்ன நடக்கும் என்பதற்கு, இது ஒரு நல்ல உதாரணம்.

தேச விடுதலைக்காக ஆயுதப் போர் தொடங்கப்பட்டதிலிருந்த இரண்டாவது ஈழப்போர் ஆரம்பிக்கப்படும் வரை, புலிகள் இயக்கம், கடலை ஒரு போக்குவரத்துப் பாதையாகவும் விநியோக வழியாகவுமே பயன்படுத்தியது. ஆனையிறவுச் சமருக்குப் பின்னர்தான், கடற்பரப்பில் புலிகள் ஒரு போர்முனையைத் திறந்தார்கள்.

கடற்போர் வரலாற்றில் இது ஒரு மிகக் குறுகிய காலம் என்பதில், கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. ஆனால் இக் குறுகிய காலத்தில் கடற்புலிகள் படைத்த சாதனையும் அதன் காரணமாக கடற்புலிகள் பெற்ற வளர்ச்சியும், மூக்கில் விரல் வைக்குமளவிற்கு அபாரமானது.

இந்தப் பெருவெற்றிக்கும் பாரிய வளர்ச்சிக்கும் பிரதான காரணம், தலைவர் பிரபாகரனின் புதியபுதிய கடற்போர் யுக்திகள் ஆகும். அத்துடன் அதை அச்சொட்டாக நடைமுறைப்படுத்தி வரும் கடற்புலித் தளபதி சூசையின் செயற்பாடும், அச்செயற்பாடுகளுக்கு இரத்தத்தாலும் சதையாலும் வடிவம் கொடுக்கும் கடற் கரும்புலிகளின் வீரமும் ஈகமும் ஆகும்.

கடற்படைமீது நேரடித் தாக்குதல்கள் தொடுக்கப்படத் தொடங்கிய இந்த நான்காண்டுகளில், சிங்களக் கடற்படையிடம் இருக்கும் கப்பல்வகைகளில் மிகப் பெரும்பாலானவை கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன.

கட்டளைக்கப்பல்; கரும்புலிகளான மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத், கப்டன் ஜெயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகியோராலும்

கண்காணிப்புத் தாய்க்கப்பல்; கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியாலும்

ஆழ்கடல் ரோந்துக் கப்பல் (சாகரவர்த்தனா); கரும்புலிகளான லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் வாமன், கப்டன் லக்ஸ்மன் ஆகியோராலும்

அதிவேக ரோந்துப் படகு (டோறா); கரும்புலிகள் மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன் ஆகியோராலும்

கரையோர ரோந்துப் படகு (நீருந்து விசைப் படகுகள்); கரும்புலிகளான மேஜர் வரதன், கப்டன் மதன், மேஜர் கோபி, மேஜர் கணேஸ் ஆகியோராலும்

தாக்குதல்களுக்கு உள்ளாகிவிட்டன. இவை தவிர மேலும் ஒருசில கரையோர விசைப்படகுகளும் மற்றும் 'ஓசன் றேட்' என்ற விநியோகக் கப்பலும் தாக்கப்பட்டுவிட்டன. இதில் கட்டளைக் கப்பலான 'அபிதா', 'எடித்தாரா' ஆகியவற்றைத் தவிர மிகுதி அனைத்துமே கடலில் மூழ்கடிக்கப்பட்டு விட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னமும் கடற்புலிகளின் தாக்குதல்களுக்கு உட்படாத நிலையில் சிறீலங்காக் கடற்படையிடம் மூன்று வகைப் போர்க்கப்பல்கள் உள்ளன. 1) வீரையா - சூரையா என எமது மக்கள் அழைக்கும் பாரிய பீரங்கிப் படகுகளும் 2) தரையிறங்கும் கலங்களும், 3) விரைவுத் துருப்பேற்றிக் கப்பலுமாகும்.

கடற்புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட போர்க் கப்பல்களுடன் ஒப்பிடுகையில், இதுவரை தாக்கப்படாது இருக்கும் இந்த இருவகைப் போர்க்கலங்களும் சிறியதும் - சக்தி குறைந்ததும் ஆகும்.


இந்தத் தகவல்கள், யதார்த்தமான - இறுதி வெற்றியில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய - ஒரு முடிவுக்கு இட்டுச் செல்கின்றன.

அதாவது, சிங்களக் கடற்படையின் எந்தவொரு போர்க்கப்பலுமே கடற்புலிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பமுடியாது என்பதுதான் அந்த முடிவாகும்.

இன்னும் சொல்லப்போனால், கடற்புலிகளின் பலம் வரவர அதிகரித்தபடி செல்வதுடன், சிங்களக் கடற்படைக்குப் பாரிய உயிர்ச் சேதத்தையும் - பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியபடி, கடற்படையை ஒரு நெருக்கடிக்குள் தள்ளிக் கொண்டும் செல்கின்றது.

கடற்புலிகளுக்கும் கடற்படைக்குமிடையில் நடைபெற்றுவரும் கடற்சண்டைகளை மதிப்பாய்வு செய்யும் ஒருவர், மேற்குறித்த முடிவுக்கு வருவது தவிர்க்க இயலாதது.

உண்மை நிலை இப்படியிருக்க, புதிய போர்க் கலங்களைக் கொள்வனவுசெய்தால் புலிகளைப் போரில் வென்றுவிடலாம், ஆள் எண்ணிக்கையை மேலும் அதிகரித்தால் புலிகளை அடக்கிவிடலாம், கால அவகாசம் தந்தால் புலிகளை அழித்து ஒழித்துவிடலாம்...... என்றவாறாக, பொய்யான மதிப்பாய்வுகளையும் பிழையான தகவல்களையும் வழங்கும் சிங்களத் தளபதிகள், சிறீலங்கா அரசையும் - சிங்கள மக்களையும் ஏமாற்றிவருகின்றனர்.




**சிறீலங்காக் கடற்படையின் கடற்பிராந்திய ரீதியான நிர்வாகப் பிரிவுகளும், கடற்படைத் தளங்களும்.**

சிங்களக் கடற்படையிடம் தற்போது 71 போர்க்கப்பல்கள், படகுகள் (மூழ்கடிக்கப்பட்டவை தவிர) உள்ளன: அத்துடன் 10, 400 பேர் கொண்ட ஆட்பலமும் உண்டு.

கடற்புலிகளைப் பொறுத்தவரை, கடற்படையிடமிருந்து கைப்பற்றப்பட்ட 06 நீருந்து விசைப்படகுகளுடன், கடற்புலிகளின் படகு கட்டும் பிரிவினரின் உள்ளூர்த் தயாரிப்புப் படகுகளும், மற்றும் சாதாரண படகுகளுமே இருக்கின்றன. 50 கலிபர் துப்பாக்கிகளும் எல். எம். ஜி. வகைத் துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டுள்ள இப்படகுகளே சிங்களக் கடற்படையுடன் மோதி, வெற்றியும் கண்டு வருகின்றன.

இது ஒருபுறமிருக்க, சிங்களக் கடற்படை எமது மக்களுக்கு இழைத்த தீங்குகள் கொஞ்ச நஞ்சமல்ல. இரண்டாவது ஈழப்போரின் ஆரம்பத்தில் அகதிகளாக இந்தியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் படகுகள்மீது சகட்டுமேனிக்குத் தாக்குதல்களை நடாத்தியும், கிளாலிக் கடல்நீரேரி ஊடாகப் பயணம்போன மக்கள்மீது கொலைத் தாக்குதல்களை நடாத்தியும், கடலிலே மீன் பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள்மீது விசமத்தனமான முறையில் தாக்குதல்களை நடாத்தியதுடன் நடுக்கடலில் இருந்தபடி குடிமனைகள் மீது எறிகணை வீசியும், நூற்றுக்கணக்கில் மக்களைக் கொன்று குவித்துள்ளது.

அதேவேளை, மீன்பிடித் தடையை விதித்து மீனவர்களைப் பட்டினிபோட்டதுடன், எமது தேசியப் பொருளாதாரத்தை வீழ்ச்சி நிலைக்குக் கொண்டுசென்றதிலும் கடற்படைக்குக் கணிசமான பங்குண்டு.

ஆயினும் கடற்புலிகளின் எழுச்சியைத் தொடர்ந்து, சிங்களக் கடற்படையின் கொட்டம் கணிசமான அளவில் அடக்கப்பட்டுள்ளதுடன், மீன்பிடித் தொழிலும் ஓரளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இவ்விதம் படிப்படியாக கடற்புலிகள் பெற்று வரும் வளர்ச்சி, தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

அதிலும் குறிப்பாக பெண் கடற் கரும்புலிகளின் ஆரம்பமே, கடற்புலிகளுக்குப் பெரு வெற்றிகளைத் தேடிக்கொடுக்கத் தொடங்கியுள்ளது. இந்தவகையில் முதற் பெண் கடற் கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் பெயரை, தமிழீழக் கடலன்னை என்றும் உச்சரித்துக்கொண்டே இருப்பாள்.

அதேவேளை, கடற்புலிகளின் மகளிர் பிரிவின் விசேட தளபதி லெப். கேணல் நளாயினியின் தலைமையில் சாகரவர்த்தனா போர்க்கப்பல் தகர்க்கப்பட்டது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வீர சாதனையாக மாறிவிட்டது.

மேற்குக் கடற் பிராந்தியத்தில் வெற்றிகரமான முறையில் கடற்போரைத் தொடங்கி வைத்த பெருமையும், பெண் கடற்புலிகளிற்கே சென்றமைந்துள்ளது.


உலகின் அண்மைக்கால போர் நடவடிக்கைகளை எடுத்தாராய்ந்தால், கடற்பலத்திலேயே யுத்தங்களின் முடிவுகள் தங்கியிருந்ததைக் காணமுடியும். இரண்டாவது உலகப் போரில் பிரிட்டன் வெற்றிவாகை சூட அதன் கடற்பலம்தான் காரணம். அதுபோல ஆர்ஜென்ரீனாவுடன் நடந்த போக்லாந்து யுத்தத்திலும் பிரிட்டன் தன் கடற்படையைப் பயன்படுத்தியே வெற்றி கண்டது. அதுபோல வளைகுடா யுத்தத்திலும் அமெரிக்கக் கடற்படையின் பங்கே மேலோங்கியிருந்தது. அண்மையில் 'கெயிற்றி' ஆட்சியாளர்களை மிரட்டிப் பணியவைப்பித்ததும் அமெரிக்கக்கடற்பலமேயாகும் அத்துடன் தன்னை ஒரு வல்லரசாக மாற்றுவதற்காக, சீனா தனது கடற்பலத்தை இப்போது பெருக்கிவருவதும் குறிப்பிடத்தக்கது.

இதுபோல ஆழ்கடலில் சிங்களக் கடற்படை வைத்திருக்கும் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்தும் வல்லமையை, தொடர் தாக்குதல்கள் மூலம் கடற்புலிகள் பெறுவார்களாக இருந்தால், அது வடபுல இராணுவத்திற்கான அனைத்து விநியோகங்களையும் தடுத்துவிடுவதற்குச் சமனாக இருக்கும். அப்படி ஒரு நிலை எழுந்தால், அது வட தமிழீழத்தில் நிலைகொண்டிருக்கும் இராணுவம் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டது என்ற செய்தியையே உலகிற்கு அறிய வைக்கும்.

இது நடைபெறும்பொழுது, 'வியட்கொங்' போராளிகளது முற்றுகைக்குள் அகப்பட்டு அழிக்கப்பட்ட பிரான்ஸ் தேசத்தின் 20,000 இராணுவத்தைப் போலவே, வடதமிழீழத்தில் இருக்கக்கூடிய சிங்களப் படையும் ஒரு 'தீன் - பீன் - பூ' நிலையை அடைந்துவிடும்.

வெற்றிலைக் கேணியில் 'ஓசன் றேட்' என்ற விநியோகக் கப்பல் தகர்க்கப்பட்டமை, இந்த முற்றுகை நிலைக்குக் கட்டியம் கூறும் நிகழ்ச்சி போன்றே அமைந்துள்ளது. ○

# "கடலில் புலிகள் நல்ல நிலையில் உள்ளனர்; தற்கொலைப் படை அவர்களது பலம்"



## 'சாகரவர்த்தனா' கப்டன் - கொமாண்டர் பொயாகொட

சாகரவர்த்தனா என்ற பெயருடைய ஆழ்கடல் ரோந்துக் கப்பலின் பிரதம கட்டளை அதிகாரியான கப்டன் பொயாகொட அவர்கள் விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலை இங்கே தருகிறோம். 18. 10. 1994 ஆம் திகதி, இந்த நேர்காணல் நடந்தது. நேர்காணலின்போது கப்டன் பொயாகொட அவர்கள் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்; வெளிப்படையாகத் தனது கருத்துக்களைக் கூறினார். சுமார் ஒரு மணிநேரம் நடந்த இந்த நீண்ட நேர்காணலின் முழுவிபரத்தையும் கீழே தந்துள்ளோம்.

கப்டன் பொயாகொட 14. 12. 1953 இல் கண்டியில் பிறந்தார். 1974 இல் சிறீலங்கா கடற்படையில் இணைந்துகொண்டார்; 'ஒ.:வ்.:விசர் கடெற்' (Officer Cadet) என்ற பதவிநிலையில் உடனேயே அமர்த்தப்பட்டார். அடிப்படைக் கடற்பயிற்சிகளை திருக்கோணமலைக் கடற்தளத்தில் பெற்றுக்கொண்ட பொயாகொட, மேலதிக விசேட பயிற்சிகளை இந்தியாவிலுள்ள 'கொச்சின் கடற்படைத் தளத்தில்' பெற்றுக்கொண்டார்.

இனி நேர்காணலைப் படியுங்கள்.

**01. 'சாகரவர்த்தனா' மீதான தாக்குதலைத் தொடர்ந்து எவ்வாறு நீங்கள் கைதுசெய்யப்பட்டீர்கள் ?**

தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து 'சாகரவர்த்தனா' மூழ்கத் தொடங்கியது; கப்பலைக் கைவிட்டு நீரில் குதிக்கவேண்டிய நிலை எழுந்தது. 'ஜக்கெற்றுகளை' அணிந்துகொண்டு நீரில் குதித்து நீந்தினோம். சிறிது நேரத்தில் கடற்புலிப் படகொன்று என்னருகே வந்து என்னைப் படகிற்குள் ஏற்றியது. நான் தனியாகத்தான் பிடிக்கப்பட்டேன். அதன்பின், புலிகளின் முகாம் ஒன்றிற்குக் கூட்டிச்செல்லப்பட்டேன். அடுத்தநாள் காலையில், மேலும் ஒருவர் சிறைப்பிடிக்கப்பட்டதாக புலிகள் சொன்னார்கள். அதன்பின் அவ்வாறு பிடிக்கப்பட்டது எனது சக அதிகாரியான கமகே விசித்த என்று கண்டுகொண்டேன். அதன்பின்னர் நாங்கள் இருவரும் கிளாலியூடாக யாழ்ப்பாணம் கூட்டிவரப்பட்டு, இப்போது நாங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு - இடம் எதுவென்று தெரியவில்லை - கொண்டுவரப்பட்டோம்.

**02. கைதுசெய்யப்பட்ட அந்தக் கணப்பொழுதில் நீங்கள் என்ன நினைத்தீர்கள் ?**

வெளிப்படையாகச் சொல்வதானால் என்னை என்ன செய்யப்போகின்றார்களோ என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். அடிக்கப்போகின்றார்களா ? அல்லது கொல்லப்போகின்றார்களா ? என எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது எனது மனைவியைப் பற்றியும் எனது குடும்பத்தைப் பற்றியும் நினைத்தேன். அப்படியான வேளையில் குடும்பத்தைப்பற்றி நினைப்பது இயற்கைதானே? நாங்கள் அதற்காகத்தானே வாழ்கின்றோம். ஆயினும் அவர்கள் (கடற்புலிகள்) என்னைக் கொல்லும் 'மூட்'இல் இருக்கவில்லை என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

**03. இப்போது நீங்கள் ஒரு போர்க் கைதியாக உள்ளீர்கள். இங்கே எவ்வாறு நடத்தப்படுகிறீர்கள் ?**

என்னைப் புலிகள் நடாத்தும் முறைகண்டு மிகவும் சந்தோசப்படுகிறேன். ஒரு போர்க் கைதியைப் போலவோ.....அல்லது ஒரு கைதியைப் போலவோ நான் நடாத்தப்படவில்லை; அதற்கும் மேலாக நட்புரிமையுடன் நடாத்தப்படுகின்றேன். இப்படியான ஒரு பராமரிப்பு முறை பற்றி நான் கொழும்பில் இருந்தபோது எதிர்பார்த்திருக்கவேயில்லை. கொழும்பில் மக்கள் கதைத்துகொள்வதற்கு முற்றிலும் மாறான ஒரு பராமரிப்பை (Treatment) நான் கண்டேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒரு விடயமென்று இதை நான் கூறுவேன்.

**04. 200 பயணிகளுக்கு மேல் பலியாகிய கிளாலிக் கடல் நீரேரிப் படுகொலைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். படகுப் பயணிகள் மீது சிறீலங்கா கடற்படை நடாத்திய இந்த வெறியாட்டத்திற்கு, ஏதாவது நியாயப்பாடுகள் இருக்கின்றன எனக் கருதுகின்றீர்களா ?**

தனிப்பட்ட ரீதியில் அத்தகைய படுகொலைகளை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அப்படிச் செய்வதன்மூலம் நாங்கள் மேலும் மேலும் எதிரிகளையே உருவாக்குகின்றோம்; அத்துடன் போர் முறைக்கே அது பிழையானது. ஒரு தாக்குதலைச் செய்யும்பொழுது அல்லது ஒரு இராணுவ நடவடிக்கை நேரத்தில், துப்பாக்கிச் சூட்டுக்கு இடையில் (Cross firing) அகப்பட்டு மக்கள் உயிரிழப்பது வேறு விடயம். அப்படியான தற்செயல் சாவுகளையும் தவிர்க்க வேண்டும்.

**05. உங்களுடைய இருபது வருட கடற்படைச் சேவையில், புலிகளுக்கு எதிராக நேரடியாகப் பங்குகொண்ட இராணுவ நடவடிக்கைகள் பற்றிச் சொல்ல முடியுமா ?**

அப்படி எந்தவிதமான இராணுவ நடவடிக்கைகளிலும் நான் சம்பந்தப்படவில்லை. அப்படி ஒரு இராணுவ நடவடிக்கையில் பங்குபெறும் வாய்ப்பு (Opportunity) எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் 'ஒப்பறேசன் விடுதலை' குறிப்பிடலாம். அப்போது நான் கிழக்குப் பிராந்தியக் கடலில் சேவையில் இருந்தேன். அதில் நான் பங்குகொண்டிருந்தேன். அதுவும் நேரடியான போர் நடவடிக்கையில் அல்ல; கடல் ரோந்திலேயே ஈடுபட்டிருந்தேன்; கடற்படையினராகிய நாங்கள் உதவிப் பணிகளில்தான (Supporting role) ஈடுபடுகின்றோம்; அதுதான் உண்மை. அத்துடன், பெரும்பாலும் நான் நிர்வாகப் பணிகளிலேயே ஈடுபட்டுவந்தேன்; எந்த வழியிலும் நான் போர்வெறி கொண்ட ஆளல்ல.

**06. 'சாகரவர்த்தனா'வின் அன்றாடக் கடமைகள் என்ன ? விசேட கடமைகள் என்ன ?**


எங்களுக்குத் தரப்பட்டது கடல் ரோந்துப் பணிதான் அத்துடன் கடல் கண்காணிப்பும் மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதும்தான. இவைதான நாங்கள் செய்யும் பணிகள்.

**07. தமிழ்நாட்டு மீனவர் படகுகள் மீதான தாக்குதல சமபவங்களுககும் 'சாகரவர்த்தனா'வுக்கும சம்பநத முள்ளதாக, சில செய்திகள் கூறுகின்றனவே ? அது உண்மையா ?**

**அப்படியாயின் அத்தகைய தாக்குதல்களில் பங்குகொண்ட போர்ப் படகுகள் பற்றிக் கூறமுடியுமா ?**

எம்முடைய 'கொமாண்ட்' காலத்தில் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. இரு நாடுகளும் கைச்சாத்திட்ட ஒரு உடன்படிக்கை இப்போது உள்ளது. அதன்படி தமிழ்நாட்டு

(19 ஆம் பக்கம் பார்க்க)



'சாகரவர்த்தனா' கப்பல் 1984 இல் முதன்முதலாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். அப்போது ஜே. ஆர். ஜெயவர்த்தனா அரசில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த திரு. லலித் அத்துலத் முதலி, கப்பலைக் கடற்படையினரிடம் வழங்கினார். 'சாகரவர்த்தனா' வெள்ளோட்டம்போன அந்த முதல் நிகழ்வை, திருமதி சிறீமானி அத்துலத் முதலி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார். கடந்த ஆண்டு திரு. அத்துலத் முதலி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார் என்பதும், சிறீமானி அவர்கள் இப்போது சந்திரிகா அரசில் அமைச்சராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

# சிறீலங்கா கடற்படை

1950ஆம் ஆண்டு டிசெம்பர் 9ஆம் திகதி, இலங்கையில் கடற்படை உருவாக்கப்பட்டது அப்போது அதன் பெயர் றோயல் இலங்கைக் கடற்படை. பின்னர், 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி இலங்கை குடியரசானதைத் தொடர்ந்து, சிறீலங்கா கடற்படை என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது. சிறீலங்கா கடற்படையின் தற்போதைய ஆட்பலம் 10,400 ஆகும். தற்போது அது வைத்திருக்கும் போர்க்கப்பல்கள் /படகுகளின் எண்ணிக்கை 88 ஆகும்.

## கடற்படையின் கட்டமைப்பு


வைஸ் அட்மிரல்
D .A. M. R. சமரசேகரா
↓

| பிரதம அதிகாரி CHIEF OF STAFF | கிழக்குப் பிராந்தியம் NAV EAST | வடக்குப் பிராந்தியம் NAV NORTH | மேற்குப் பிராந்தியம் NAV WEST | தெற்குப் பிராந்தியம் NAV SOUTH | நடவடிக்கை இயக்குனர் Director of operation |
|---|---|---|---|---|---|
| றியர் அட்மிரல் H. C. A. C. திசேரா ↓ | றியர் அட்மிரல் D. K. தசநாயக்கா ↓ | கொமடோர் H. R. அமரவீர ↓ | கொமடோர் J. T. G. சுந்தரம் ↓ | கொமடோர் A. H. M ராசிக் ↓ | கொமடோர் சந்தகிரி ↓ |
| திட்டமிடல் அலுவலகம் | திருமலைத் தளம் | காரைநகர் (எலார) | கொழும்புத் தளம் | தங்காலைத் தளம் | கடற் - தரைப் பயிற்சி அலுவலகம் |
| நிர்வாக ,, | கடல்சார் பயிற்சிக் கழகம் | காங்கேசன்துறை காபர்வியூ ஹொட்டேல் | கற்பிட்டித் தளம் | காலித் தளம் | தொலைத்தொடர்பு அலுவலகம் |
| விநியோக ,, | டொக்யாட் பிரிவு | நயினாதீவு முகாம் | கொச்சிக்கடை தளம் | | கடற் பொறியியல் அலுவலகம் |
| பொறியியல் ,, | ஆண்டான்குள முகாம் | வெற்றிலைக்கேணி முகாம் | வெலிசற தளம் | | |
| சுகாதார ,, | கடற்படைப் பண்ணை | | | | |
| நலன்புரி ,, | | | | | |
| தொண்டர் ,, | | | | | |

மேற்குறித்த அட்டவணைப்படி கடற்படைத் தளபதியின் தலைமையில், சிறீலங்கா கடற்படை ஆறு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என நான்கு கடற்பிராந்தியங்களாக இலங்கைக் கடற்பரப்பு வகுக்கப்பட்டிருக்கின்றது. அத்துடன் நிருவாக ரீதியாக பிரதம அதிகாரி, நடவடிக்கை இயக்குனர் என்று இரு பகுதிகள் இருக்கின்றன. இந்த ஆறு பகுதிகளினதும் பணிகள் – தளங்கள் என்பன அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன.

கடற்படைத் தளபதி ஓய்வு பெறும்போது, பிரதம அதிகாரி நிலையில் இருப்பவர் அந்தப் பதவிக்கு உயர்த்தப்படுவார்; இது ஒரு வழமை. இதேபோல கிழக்குப் பிராந்தியத்தின் பொறுப்பதிகாரி பிரதம அதிகாரியின் இடத்துக்கு உயர்த்தப்படுவார்; இதுவும் ஒரு சிங்களக் கடற்படையின் வழமை.

பிரதம அதிகாரியும். கிழக்குப் பிராந்தியத் தளபதியும் றியர் அட்மிரல் என்ற பதவிநிலை கொண்டிருப்பதை அட்டவணைமூலம் தெரிந்துகொள்ளலாம். ஆயினும் சேவை மூப்பு அடிப்படையில் பிரதம அதிகாரியே உயர்ந்த நிலையில் இருப்பார்; அதாவது கடற்படையின் மூன்றாவதுநிலைத் தளபதியாக கிழக்குப் பிராந்தியத் தளபதியே விளங்குவார். சிறீலங்காக் கடற்படையின் இந்த வழமைக்கு ஒரு காரணமுண்டு. திருக்கோணமலை கடற்படைத் தளத்தின் சக்தியும் – அதன் முக்கியத்துவமும்தான் அதற்குக் காரணம். சிங்களக் கடற்படையின் முதுகெலும்பைப் போன்றும் – மூளையைப் போன்றும் செயற்படுவது திருக்கோணமலைத் தளமேயாகும்; எனவேதான், சிங்களக்கடற்படைக்குத் தலைமைதாங்க முன் ஒருவர் கிழக்குக் கடற் பிராந்தியத்தில் அதற்காகப் பயிற்றுவிக்கப்படுகின்றார்.




## கடற்படைப் பதவிநிலை

01 றெக்குருட்
02 ஓடினறி சீமன்
03 ஏபிள் சீமன்
04 லீடிங் சீமன்
05 பெற்றி ஒஃவ்ஃவீசர்
06 சீஃவ் பெற்றி ஒஃவ்ஃவீசர்
07 ஃபிளீட் சீஃவ் ஒஃவ்ஃவீசர்
08 சப் லெப்ரினன்ற்
09 லெப்ரினன்ற்
10 லெப்ரினன்ற் கொமாண்டர்
11 கொமாண்டர்
12 கப்டன்
13 கொமடோர்
14 றியர் அட்மிரல்
15 வைஸ் அட்மிரல்
16 அட்மிரல்

## கடற்படையின் போர்க்கலங்கள்

1 கட்டளைக் கப்பல்கள் - 04
2 ஆழ்கடல் ரோந்துக் கப்பல்கள் - 02
3 விரைவுப் பீரங்கிப் படகுகள் - 08
4 விரைவுத் தாக்குதற் படகுகள் (டோறா) - 15
5 விரைவுத் துருப்பேற்றிப் படகுகள் - 02
6 தரையிறங்கும் கலங்கள் - 04
7 கரையோர ரோந்துப் படகுகள் - 19
('சவட்டன்' படகுகள்;
'டொக்யாட்'டில் தயாரித்த படகுகள்)
8 உட்கரையோர ரோந்துப் படகுகள் - 34

(கூகர், சீகாட், டிங்கி, நீருந்து விசைப்படகுகள்)

இந்த 88 போர்க்கப்பல்களில் / படகுகளில், கடந்த நான்கு வருடங்களில், 15 போர்க்கப்பல்களை/படகுகளை கடற்புலிகள் அழித்துவிட்டனர் அல்லது கைப்பற்றிவிட்டனர். இதேவேளை மூன்று கப்பல்களை (மூழ்கிய 'கந்துல' கப்பல் உட்பட)சேவையிலிருந்து கடற்படை நீக்கிவிட்டது.

எனவே இப்போது சிங்களக் கடற்படையின் கப்பற் பலம் மொத்தம் 70ஆகும்.

## கடற்படைப் பிராந்தியத் தலைமையகங்கள்

வடகடல் பிராந்தியம் –காரைநகர் (எலார தளம்)
கிழக்குக் கடல் பிராந்தியம் – திருக்கோணமலை (திஸ்ஸ தளம்)
மேற்குக் கடல் பிராந்தியம் –கொச்சிக்கடை (றங்கல தளம்)
தெற்குக் கடல் பிராந்தியம் – தங்காலை (றுகுணு தளம்)

இதேவேளை சிறீலங்கா கடற்படைத் தளபதியின் தலைமையகமாக, மேற்குக் கடற் பிராந்திய தலைமையகமான கொச்சிக்கடை றங்கல தளமே செயற்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிங்களக் கடற்படையின் பாரிய தளங்கள் அமைந்திருக்கும் இடங்களாக திருக்கோணமலை, காரைநகர், கொழும்பு, வெலிசற, தங்காலை, கற்பிட்டி ஆகியவை விளங்குகின்றன. ○

# ஒரு பேரினவாதியின் அவலச்சாவு!

ஜே. ஆரின் பேரினவாதப் பட்டறையில் உருவாக்கப்பட்ட, ஒரு தமிழின விரோத அரசியற் தலைவர்தான் திரு காமினி திசா நாயக்கா. இந்தக் கருத்து, தமிழினத்தின் நோக்கு நிலையிலிருந்துமட்டும் சொல்லப்பட்ட பக்கச்சார் பானதொரு கருத்து என்று, எவரும் கூற முடியாது. சிறீலங்காப் பிரதமர் சந்திரிகா அம்மையாரும் வெளிப்படையாக - பெயர் சுட்டிக் காட்டி - கூறியுள்ளார். '' ஜே. ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாசா, காமினி திசாநாயக்கா ஆகியோரது தலைமையே இனப்போரை இங்கு தோற்றுவித்தது.'' இது, ரூபவாகினிமூலம் (30. 10. 1994) அவர் தெரிவித்த கருத்து; அதுவும் காமினி திசாநாயக்காவின் உடல் தகனம்செய்யப்பட்ட மறுநாளே, இந்தக் கருத்தை உலகின் செவிக்குக் கொடுத்துவிட்டார்.

கொழும்பு - கிறான்ட்பாசில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப் பொன்றில் காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டார் என்பது, எல்லோரும் அறிந்த செய்தி.

அவர் கொலையுண்டதும், '' அதற்குக் காரணம் புலிகள் இயக்கமே'' என்று ஐ. தே. கட்சியினர் கூக்குரலிட்டனர்.

தமிழின அழிப்பில் பங்குகொண்டவர்கள் எங்கென்றாலும் கொல்லப்படும்போது - எந்த வித சாட்சிகளுமில்லாமலேயே - புலிகள் இயக்கத்தை நோக்கிச் சுட்டுவிரல் நீட்டும் ஒரு மரபு உருவாகிவிட்டது. இந்த மரபின் வரலாற்றுத் தோற்றம்பற்றி இங்கு நாம் ஆராய முனையவில்லை. காமினி திசாநாயக்காவின் அவலச் சாவின்போதும் அந்த மரபுக் கண்ணாடியூடாகவே அதற்கான காரணத்தை அறிய உலகம் முயல்கின்றது.

ஏன் காமினி கொல்லப்பட்டார்? அதற்கான காரணிகள் எவை, என்ற கேள்விகளுக்கு, பி. பி. சியிலிருந்து சிங்களப் பத்திரிகைகள் அனைத்துமே பதில்காண முனைந்துள்ளன. அந்த மதிப்பீடுகளில் எதுவுமே காமினியை ஒரு அப்பாவி அரசியல்வாதியாக அல்லது ஒரு கனவானாக அல்லது ஈழத் தமிழினத்தின் நட்புச் சக்தியாகக் காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். நூல்நிலையத்தை எரித்து, தமிழினத்திற்கெதிராக ஒரு திட்டமிட்ட பண்பாட்டுப் படுகொலையைக் காமினி நேரடியாக நடாத்தியிருந்தார் என்ற குற்றச்சாட்டு ஒன்று உள்ளது; எனவே, அவரை ஒரு இராணுவ இலக்காக புலிகள் கருதியிருக்கக்கூடும் என்ற ஒரு கருத்தை, அவை தெரிவிக்கின்றன,

அதேவேளை, 1983 யூலை தமிழினப் படுகொலை நிகழ்ந்தபோது, காமினி திசாநாயக்காவை ஏற்றிய படிபறந்தஉலங்குவானூர்தி ஒன்று நுவரெலியாவில் தரையிறங்கிய சில நிமிடங்களில், அதுவரை மயான அமைதியுடன் இருந்தமலையகம் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. அந்த மலைத்தீயில் தமிழர்கள் வெந்து மடிந்ததும் புலிகள் இயக்கத்திற்குத் தெரிந்திருக்கும்; அதனால் புலிகளின் இராணுவ இலக்காக காமினி இருந்திருக்கலாம் என்றும் ஒரு கருத்தை அவை கூறியுள்ளன.

அத்துடன், 'மகாவலி அபிவிருத்தித் திட்டம்' என்பதன்கீழ் கிழக்கு மாகாணத் தமிழர்களது நிலங்களை அபகரித்து - அவர்களை அகதிகளாக விரட்டிவிட்டு - அங்கே சிங்களவர்களைக் குடியமர்த்தி, தமிழினத்திற்கெதிரான தாயக கபளீகரத்திற்கும் காமினி நேரடியாகத் தலைமை தாங்கியிருந்தார். அது காரணமாக புலிகளின் இராணுவ இலக்காக அவர் இருந்திருக்கலாம் என்றும் ஒரு கருத்தை அவை முன்வைத்துள்ளன.

அதுமட்டுமல்ல; தமிழரின்விடுதலைப்போரை ஒடுக்குவதற்காக இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்றொரு அரசியல் நகர்வைச் செய்து, அதன் வாயிலாக இந்தியப் படைகளைத் தமிழர் தாயகத்திற்கு அனுப்பி, அதன்விளைவாக 8000 இற்கும் மேற்பட்ட தமிழர்களது படுகொலைகள் - மற்றும் பாலியல் வன்முறை, சொத்தழிப்பு உட்பட்ட ஒரு இன அழிப்பில் ஜே. ஆருடன் கைகோத்து காமினி செயற்பட்டிருந்தார்; அதனால், அழிக்கப்பட வேண்டிய ஒரு இராணுவ இலக்காக அவரைப் புலிகள் கருதியிருக்கலாம் என்றும் ஒரு கருத்தை அவை எழுதியுள்ளன.

அத்துடன் நின்றுவிடாது, அடுத்த ஜனாதிபதியாக காமினி திசாநாயக்கா வந்தால், மீண்டும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைப் புதுப்பித்து, மீண்டும் இந்தியப் படைகளை அழைத்துத் தமிழர்களை அழிக்க முயன்றுவிடுவார் என்ற ஐயமும் புலிகளுக்கு எழுந்திருக்கலாம்; அதனால் காமினியை அழித்து, தமிழினத்திற்கு வரவிருந்த பேரழிவைத் தடுத்துநிறுத்தி ஒரு முற்காப்பு நடவடிக்கை எடுக்க புலிகள் தீர்மானித்திருக்கலாம் என்றும் அவை கூறுகின்றன.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகளின்போது காமினி திசாநாயக்கா கக்கிய பச்சை இனவாதப் பேச்சுக்களையும் புலிகள் செவிமடுத்திருப்பார்கள் என்றும், அந்தச் செய்திகள் கூறியுள்ளன. சமாதானப் பேச்சுக்களைக் குழப்பமுனையும் அவரது இனவாதப் பேச்சுக்களும், '' நான் ஜனாதிபதியானால் வடக்குக் கிழக்குக் கரையோரங்களில் சிங்கள மீனவர்களைக் குடியமர்த்தி - அவர்களுக்கு இராணுவப் பாதுகாப்புக் கொடுத்து மீன்பிடித் தொழிலை நடாத்துவேன் '' என்ற அவரது அபாயகரமான வாக்குறுதிகளும், காமினியை ஒரு இராணுவப் பூதமாக புலிகளுக்குக் காட்டியிருக்கக்கூடும் என்றும், சில ஊகங்கள் கூறப்பட்டிருந்தன.

இத்தகைய கருத்துக்கள் மற்றும் ஊகங்கள் ஈழத் தமிழினத்திற்கு - தமிழீழ தேசியத்திற்கு- விரோதமானவை என்பது வெளிப்படை. எனவே, ஈழத் தமிழினத்தின் முன்னணிப்படையான - தமிழீழ தேசியத்தின் கவசமான - புலிகள் இயக்கம், தற்காப்பு நடவடிக்கையாக அல்லது ஒரு தண்டனையாக அந்தக் குண்டு வெடிப்பைச் செய்து காமினியை அழித்திருக்கலாம் என்றே, அந்த மதிப்பீடுகள் கூறவருகின்றன. ○



ஜெயவர்த்தனாவுடன் காமினி திசாநாயக்கா: குருவும் சீடனும்

ஜெயவர்த்தனாவின் பேரினவாதப் பட்டறையில் உருவாக்கப்பட்ட பிரேமதாசா, அத்துலத்முதலி போன்ற தமிழின விரோத சிங்களத் தலைவர்களில் ஒருவர்தான் காமினி திசாநாயக்கா.

*தமிழின அழிப்பில் பங்கேற்றவர்கள் எங்கென்றாலும் கொல்லப்படும்போது, உடனடியாகப் புலிகள் இயக்கத்தை நோக்கிச் சுட்டுவிரல் நீட்டும் ஒரு மரபு உருவாகிவிட்டது. அந்தமரபுக் கண்ணாடியூடாகவே காமினியின் மரணத்திற்கான காரணத்தையும் அறிய உலகம் முனைகின்றது.*

# ஓர்மம் உணர்த்திய தாக்குதல்!

காடு!

அதில் யானை!

காட்டு மிருகங்களில் மிகப்பெரியது யானை! அது உயரத்தில் 8 அடியிலிருந்து 11 அடிவரை இருக்கும். அதன் உடல் 3½ தொன்னிலிருந்து 6 தொன் பாரம் ( 1 தொன் = 2240 இறாத்தல் ).

இரண்டு நீண்ட கூரிய கொம்புகள், அதாவது தந்தங்கள்!

யானை காட்டு மரங்களின் கொப்புக்களையெல்லாம் வளைத்து முறித்து தனது உணவாக்கிவிடும்!

காட்டில் எத்தனையோ வகையான மிருகங்கள் இருக்கும். அவற்றுள் மிகப் பெரியது யானைதான்!

ஆனால், இந்தப் – பருத்த – பலம் கொண்ட யானையானது வெருண்டு பயம் கொண்டு நிற்கின்ற நிலையை, திருக்குறளின் ஒரு வரியில் வள்ளுவப் பெருந்தகையார் காட்டி நகையாடுகிறார்!

யானை ஏன் வெருண்டு தனது பலத்தையெல்லாம் இழந்து தளர்ந்தது?

புலி!

புலிக்குரிய ஓர்மம்! அதன் விரைந்து வரும் தாக்குதல்!

பாவம், யானைக்கு பாய்ச்சல் என்ற தாக்குதல் முறை வரவே வராது! அது வெருண்டு விடுகிறது! இந்த வெருட்சி அல்லது பயம் – யானையின் பலத்தையெல்லாம் களவாடி விடுகிறது!

புலியின் ஓர்மம் இதற்கு எதிர்மாறானது! இந்த வீர உணர்வு அதன் பலத்தை ஆயிரம் மடங்கு கூட்டுகிறது. அதன் கூரிய பற்கள், கிழிக்கும் நகங்கள், அவ்வேளை சாதாரணமானவை அல்ல!



எனவே, உடலால் பருத்தும் இரு கூரிய கொம்புகளை உடையதுமான யானை, புலியின் தாக்குதலினால் வெருண்டு விடும் காட்சியை, குறள் 599 இல் காண்கின்றோம்.

'பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை வெரூஉம் புலிதாக்குறின்.'

உருவத்தால் பெரியது; கூரிய இரு கொம்புகளை – தந்தங்களை – உடையது; எனினும் யானை வெருண்டு விடுகிறது, புலி தாக்கும்போது என்பது அக்குறள்.

இந்தக் குறளின் நினைவு, இந்த 21 . 09 . 94 ஆம் தேதி நாளிதழைப் படித்தபோது நெஞ்சத்தில் எழுந்தது.

'சாகரவர்த்தனா' - சிங்கள அரசின் சாதாரணக் கப்பல் அல்ல; அது ஒரு போர்க்கப்பல். இதன் நீளம் 130 அடி. நிறை 330 தொன். அது ஏனைய இயந்திரத் துப்பாக்கிகளுடன் இரண்டு இரட்டைப் பீரங்கிகளையும் கொண்டது.

சிலாவத்துறைக் கடற்பரப்பில்வைத்தே இப்போர்க்கப்பல், இந்த செப்ரெம்பர் 19 ஆம் தேதி, கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. நள்ளிரவு 11 . 25 இற்குத் தொடங்கிய தாக்குதல் – ஒரு மணி நேரத்தில் - 12 . 30 இற்கு, இக்கபபல் முற்றாக மூழ்கடிக்கப்பட்டதுடன் முடிந்தது!

குறைந்தது நான்கு அதிகாரிகள் உட்பட 25 கடற்படையினர் கொல்லப்பட்டனர்; கப்பல் தளபதி கடற்புலிகளால் கைதுசெய்யப்பட்டார்!

இத்தாக்குதலின்போது கடற் கரும்புலி லெப். கேணல் நளாயினி, கடற் கரும்புலி மேஜர் மங்கை, கடற் கரும்புலி கப்டன் லக்ஷ்மன், கடற் கரும்புலி கப்டன் வாமன் ஆகியோர் வீரச்சாவை வரவேற்றுக் கொண்டனர்.

சில நாட்களுக்கு முன்னர்தான், கட்டளைக் கப்பலைத் தகர்த்த கடற் கரும்புலி அங்கயற்கண்ணியின் அஞ்சலிக் கூட்டத்தில், கடற்புலி மகளிர் படைப்பிரிவின் விசேட தளபதி என்ற வகையில், கடற் கரும்புலி லெப். கேணல் நளாயினி கலந்து உரையாற்றினாள்.

இவர்களே வள்ளுவர் காட்டும் புலிகள் ○

# போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும் தடைநீக்கியாகச் செயற்பட்ட தலைவனும்!



1972 - 1973 - 1974.

ஆயுதப் போராட்டம் கருவிலிருந்த காலம்.

தனியாகவும் சிறுகுழுவாகவும் ஆயுதப் போராளிகள் உருவாகிக்கொண்டிருந்த நேரம்.

துப்பாக்கி, வெடிகுண்டு, புரட்சி என்பவற்றில் அனுபவம் எதுவுமே இல்லாத ஒரு பூச்சிய நிலை.

ஆயினும் அரச வன்முறையை, எதிர் வன்முறையாலேயே எதிர்கொள்ள வேண்டும் என்ற துடிப்புடன், இளைஞர்கள் சிலர் வீதிக்கு வரத்தொடங்கிய காலம்.

சிங்கள இனவாத அரச அடக்குமுறைக்கு முண்டுகொடுக்கும் தூண்களை, ஆயுதங்கொண்டு அப்புறப்படுத்த அவர்கள் விரும்பினர்.

அன்றைய நிலையில் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரிய தடையாக- கோடரிக் காம்பாக - துரையப்பா விளங்கினார். சிங்கள அரசின் முகவரான இவர், யாழ். நகர மேயராகப் பதவிவகித்தபடி தமிழினத்தைக் காட்டிக்கொடுத்துக்கொண்டிருந்தார்.

எனவே துரையப்பாவை அழித்து, ஆயுதப் போராட்டப் பாதையைத் திறந்து வைக்க அவர்கள் விரும்பினர்.

இந்தப் பணியை நிறைவேற்றப் பலர், பலதடவைகள் முயன்றனர்; வெற்றி கிடைக்கவில்லை. அதேவேளை தமிழின விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்ட துரையப்பா போராட்டத்தின் பிரதான தடைக்கல்லாகவே மாறி விட்டார்.

இந்தத் தடைக்கல் அகற்றப்படாவிட்டால், ஆயுதப் போராட்டப் பாதையைத் திறக்கவே முடியாது என்ற நிலை உருவாகிவிட்டது.

பலர் முயன்றனர்.

சிலர் திட்டங்களுடன் நின்றுவிட்டனர்.

சிலர் இலக்குவரை சென்று இயலாமையால் திட்டங்களைக் கைவிட்டனர்.

ஆனால், சிவகுமாரன் பல தடவை முயற்சி செய்தார்.

கைக்குண்டு வீசி - துப்பாக்கியால் சுட்டு - காருக்குண்டுவைத்து பலவாறு முயன்றார்; ஆனால் வெற்றி கிடைக்கவில்லை.

இராணுவ அனுபவமின்மை, அதனால் பதற்றம், அதுகாரணமாக சகபாடிகளிடமிருந்து ஒத்துழைப்பின்மை, முறையான வழிநடாத்தலின்மை என்பன தோல்விகளைக் கொடுத்தன.

இந்தத் தடைக்கல்லை எப்படியாவது அகற்றிவிடுவதென்று தலைவர் முடிவெடுத்தார்.

அது 1975 ஆம் ஆண்டு.

அப்போது தலைவருக்கு வயது 20.

நம்பிக்கையான சிலரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, துணிவை மூலதனமாக்கினார்; என்ன நடந்தாலும் இலக்கை அழித்துவிடுவது என்று உறுதி எடுத்தார். தாக்குதலணிக்குத் தலைமை ஏற்றுச்சென்று, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலடியில் வைத்து - தடைக்கல்லை உடைத்து - ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பப் பாதையைத் திறந்துவைத்தார்.

துரையப்பா அழிக்கப்பட்டது தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

துரோகிகள் ஒழிப்புப் படலம் தொடங்கியது.

தமிழரின் ஆயுதப்போர் 'தெத்தித் தெத்தி' நடைபயிலத் தொடங்கியது.

* * *

துரோகிகள் களையெடுக்கப்படத் தொடங்கியதும் சட்டம் ஒழுங்கைப் பேணல் என்ற போர்வையில், சிங்களக் காவல்துறை, போராட்டத்தைப் பின்னோக்கி இழுக்க முயன்றது.

தகவல் கொடுப்போரும் உளவுத் துறையினரும் பொலிசாரும் போராளிகளின் இலக்குகளாகத்தொடங்கினர்; போராட்டப் பயணம் வெற்றிகரமாகத் தொடர்ந்தது.


அப்போது இராணுவம் குறுக்கே வந்து நின்றது.

இராணுவம்மீது தாக்குதல் நடாத்தி வெற்றிகாண முடியுமா ? போராளிகளின் உள்ளத்தில் ஒரு 'மனத்தடை' எழுந்தது. இந்த மனத்தடையை உடைத்தெறியும்படி அன்றைய தாக்குதலணித் தளபதியாக இருந்த லெப். சாள்ஸ் அன்ரனியிடம் தலைவர் பணித்தார்.

லெப். சாள்ஸ் அன்ரனியின் தலைமையில் சென்ற லெப். கேணல் புலேந்தி அம்மானும் கப்டன் ரஞ்சனும் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில்வைத்து, முதன் முதலாக சிங்கள இராணுவத்தினர் சிலரை அழித்து, அந்தச் சாதனையைப் படைத்தனர்.

போராட்டம் புதியதொரு பரிமாணத்துக்குள் சென்றது.

ஒன்று, இரண்டு என்று உதிரிகளாக இராணுவத்தினர் கொல்லப்பட்டுக்கொண்டிருந்த போக்கிலிருந்து முன்னேறி, பெருந்தொகையில் இராணுவத்தினரை அழித்து, ஆயுதங்களைக் கைப்பற்றி, இப்புதிய பரிமாணத்தை முன்னோக்கி நகர்த்திவிடும்படி தலைவர் ஆணையிட்டார்.



கண்ணிவெடி உபாயத்தைக் கைக்கொண்டு அதைச் சாதிக்கும்படி பணித்தார்.

போராளிகள் முயற்சிகளைத் தொடங்கினர்.

ஆரம்ப முயற்சிகள் சில அரங்கேறாமலே முடிவைச் சந்தித்தன.

உமையாள்புரத்தில் ஒரு கண்ணி புதைக்கப்பட்டு வெடிக்கவைக்கப்பட்டது; ஆனால் வெற்றிவரவில்லை.

பொன்னாலைப் பாலத்துக்கு அருகில்

கடற்படை வாகனம் மீது ஒரு கண்ணி வெடித் தாக்குதல் முயற்சி நடந்தது; கண்ணி வெடித்தும் முயற்சி வெற்றி பெறவில்லை.

இதேபோல மேலும் சில முயற்சிகள் பிசுபிசுத்தன.

புதிய பரிமாணம் ஸ்தம்பித நிலைக்குச் சென்றுவிட்டது.

அதுவே போராட்டப் பாதையில் ஒரு தடைக்கல்லாகவும் மாறிவிட்டது.

இந்த நிலையை வளரவிட்டால் போராளிகளின் மனவுறுதி சிதைந்துவிடும்; அது இராணுவத்துக்கு வாய்ப்பாக அமைந்து போராட்டத்தைப் பாதித்துவிடும் என்று உணர்ந்த தலைவர் அவர்கள், கண்ணி வெடித் தாக்குதலொன்றைத் தானே நெறிப்படுத்தி, நேரடியாகக் களத்தில் நின்று வெற்றிகரமாகச் செய்துமுடித்துப் போராட்ட வண்டியை நகர்த்திவிட முடிவெடுத்தார்.

எமது விடுதலைப் போரைச் சர்வதேச மயப்படுத்திவிட்டதும் சிங்கள அரசின் குரூர முகத்தை உலகிற்குப் புலப்படுத்திவிட்டதுமான 1983 யூலை 23 கண்ணிவெடித் தாக்குதலுடன், ஸ்தம்பிதமடைந்து நின்ற போராட்ட வண்டியை - திருநெல்வேலியில் வைத்து - தலைவர் விரைந்தோடச் செய்தார்.

* * *

திருநெல்வேலிக் கண்ணிவெடிக்குப் பின்னர் எமது விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு திருப்புமுனைகள் நிகழத்தொடங்கிவிட்டன. இதில் இந்தியத் தலையீட்டைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்திய அரசின் அழைப்பை ஏற்று தமிழ்நாடு சென்ற தலைவர் அவர்கள், அங்கிருந்தவாறு போராட்டத்தை வழிநடாத்தத் தொடங்கினார்.

இதேவேளை தமிழீழமெங்கும், குறிப்பாக, வடதமிழீழத்தில் நிகழ்த்தப்பட்ட தொடரான கண்ணிவெடித் தாக்குதல்கள், சிங்களப் படைக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தின. அதேவேளை, அரச படைகளுக்கெதிரான கெரில்லாப் போர்முறையும் உயர்ந்த பரிமாணத்தை நோக்கி விறு நடை போடத் தொடங்கியது.

விளைவு : இராணுவம் முகாம்களுக்குள்ளேயே முடக்கப்பட்டது.

முடக்கப்பட்ட இராணுவத்தை அதன் முகாம்களுக்குள்ளேயே வைத்துத் தாக்கி அழிக்கும் திட்டங்களுடனும் போராட்டத்திற்கு எதிரான இந்திய அழுத்தங்களிலிருந்து தப்பிக்கவும் தலைவர் மீண்டும் தமிழீழம் வந்தார்.

வந்தவுடனேயே மினிமுகாம்கள் மீதான தாக்குதற் படலத்தை ஆரம்பித்துவைத்தார்.

பதுங்கித் தாக்குதல் என்ற கெரில்லாத் தாக்குதற் போர்முறையின் ஆரம்ப வடிவம், கொமாண்டோ தாக்குதல்களாகவும் அதிரடிகளாகவும் பரிமாணம் கண்டது. சிங்களப் படையணிகள் இராணுவத் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கின; போராட்டம் புது வேகத்துடன் விரைந்தது.

இந்த உண்மையை உணர்ந்த இலங்கை - இந்திய அரசுகள் எமது போராட்டத்திற்கு எதிராகக் கைகோத்தன.

இந்திய அரசின் அனுசரணையுடன் சிங்களப் படைகள் 'ஒப்பரேசன் லிபரேசனை' நடாத்தி, வடமராட்சியை ஆக்கிரமித்தன.

அத்துடன் நிற்கவில்லை.

ஆனையிறவிலிருந்து படைநடாத்தி வந்து அதன் துணையுடன் வலிகாமத்தையும் கைப்பற்ற முயற்சிகள் நடந்தன.

யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கையிழந்தனர்.

போராட்ட வண்டி பெரிய நெருக்கடிக்குள் மாட்டிக்கொண்டது.

எனவே புதிய போர்முறை ஒன்றை அறிமுகப்படுத்தி, சிங்களப் படைத்துறைக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து, விடுதலைப் போரை ஒரு புதிய - உயர்ந்த- பரிமாணத்துக்குள் கொண்டுசெல்லத் தலைவர் முடிவெடுத்தார்-

கரும்புலிகள் போர்முறையை வரைந்தார்.

மில்லர் என்ற வீரப்புலியை கரும்புலியாக்கி எதிரியின் கூடாரத்திற்குள் அனுப்பி, ஆக்கிரமிப்புப் புற்றுநோய்க்கு அறுவைச் சிகிச்சை ஒன்றைச் செய்தார்.

சிங்களப் படைத்துறை திகைத்தது.

போராட்டம் எதிர்கொண்ட நெருக்கடி தகர்ந்தது.

மீண்டும் போராட்ட வண்டி நெல்லியடியில் இருந்து முன்னேறத் தொடங்கியது.

ஆனால், இந்திய - இலங்கை அரசுகள் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன், சூழ்ச்சிகள் பல வரைந்தன.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற ஒரு சதித்திட்டத்தைத் தீட்டி, இந்தியத் துருப்புக்களைத் தமிழீழத்திற்குள் கொண்டு வந்தன.

ஒரு வல்லரசுடன் மோதுவதைத் தவிர்க்கவும், அமைதி இழைகள்கொண்டு பின்னப்பட்ட சூழ்ச்சி வலைக்குள் தமிழினம் சிக்கிவிடாது தவிர்க்கவும் அரசியல் சதுரங்கத்தைத் தலைவர் அவதானமாக ஆடினார்.

ஆனால் இந்திய அரசோ அரசியல் விளையாட்டுகளுக்கு அப்பால் நரபலி எடுக்கத் தொடங்கியது. தமிழருக்கு உரிமை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாகத் தமிழீழ தேசியத்தைக் கொன்று விடுவதிலேயே இந்தியா குறியாக இருந்தது.

இந்திய இராணுவ பலத்திற்கு அடிபணிவதன்மூலம், இரத்தம் சிந்தி நாம் வளர்த்தெடுத்த தமிழீழ தேசியத்தை இந்தியா கொலைசெய்ய அனுமதிப்பதைவிட, எதிர்த்துப் போராடி அதைப் பாதுகாக்க முனைவதே சிறந்தது என, தலைவர் முடிவெடுத்தார்.

இந்திய - புலிகள் போர் தொடங்கியது.

ஒரு மாதத்தில் யாழ். மாவட்டம் வீழ்ச்சியுற்றது. மற்றைய மாவட்டங்களும் இந்தியச் சிப்பாய்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாகியது.

ஆயினும், தமிழீழத்தின் இதயத்துக்குள் புகுந்துகொண்ட தமிழீழத் தேசியக் காவலன், இந்தியச் சிப்பாய்களிடம் சிக்கிவிட்ட போராட்ட வண்டியை மீட்டெடுக்க, ஒரு மீட்புப் போரைத் தொடங்கினார்.

ஆனால், தலைவரைக் கொல்லும் இலக்குடன், தமிழீழத்தின் இதயம்மீதே இந்திய அரசு ஒரு பெரும் படையெடுப்பை நடத்தியது.

வெள்ளம்போல் வரும் இந்தியச் சிப்பாய்களிடமிருந்து உயிரைப் பாதுகாக்கப் பணிந்துபோவதே சிறந்தது என்று, தலைவருக்குப் பலர் ஆலோசனை கூறினர்-

தலைவர் உயிருடன் இருந்தால்தான் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தமுடியும் என்ற உண்மையை எடுத்துக்கூறி வாதிட்டனர்.

ஆனால், போராட்ட வண்டியை இழந்துவிட்டு தான் உயிர்வாழத் தலைவர் விரும்பவில்லை.

எனவே, போராட்ட வண்டியை மீட்டெடுப்பதற்காக இந்தியப் படையுடன் போராடி, அதன்மூலம் சாவு வந்தால் அதை எதிர்கொள்ளவே தலைவர் விரும்பினார்.

இதேவேளை இந்திய வல்லரசுடன் போரிட்டு வெல்லமுடியுமா என்ற அவநம்பிக்கை மக்களை மட்டுமல்ல, எமது மூத்த உறுப்பினர்கள், தளபதிகள், சாதாரண போராளிகள் என்று பலரையும் ஆட்கொண்டிருந்தது.

இந்தநிலையில், இந்தியப் படையுடன் போரிட்டு எமது விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்கவேண்டும் என்ற மிகவும் துணிச்சலான - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - இந்த முடிவைத் தன்னந்தனியனாகவே நின்று எடுத்த தலைவர் அவர்கள், தீர்மானத்துடன் நின்றுவிடாது, தானே போர்க்களத்தை நேரடியாக வழிநடாத்தத் தொடங்கினார்.

கெரில்லாப் போர்முறையில் புதிய புதிய நுட்பங்களை - புதிய புதிய தந்திரோபாயங்களை - புகுத்திய தலைவர் அவர்கள், புலிகள் இயக்கம் சரித்திரம் படைக்க வழிகாட்டினார்.

மணலாற்றுக் காட்டுக்குள் தலைவரின் நேரடி வழிகாட்டலில் புதிய சரித்திரம் படைக்கத் தொடங்கிய புலிவீரர்கள், படிப்படியாக தமிழீழமெங்கும் இராணுவ சாதனைகளைப் படைக்கத் தொடங்கினர். இந்தியப் படைகளின் 'செக்மேற்'றை வெற்றிகொண்டதன்மூலம் மீட்கப்பட்ட எமது போராட்ட வண்டி, மணலாற்றுக் காட்டுக்குள்ளிருந்து புத்தூக்கத்துடனும் புதிய வேகத்துடனும் புறப்படத் தொடங்கியது.

தோல்விச் சகதிக்குள் இந்தியப்படை மாட்டிக்கொண்டது.

'இழப்புக்கள்' என்ற தேரேறி தோல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்தியப் படைகளை மேலும் விரைவாகத் தோற்கடிப்பதற்காக, ஒரு இராஜதந்திர வியூகம் வகுத்த தலைவர் அவர்கள், சிங்கள அரசின் 'ஒத்துழைப்பையும்' பெற்று, அரசியல் - இராணுவ ரீதியில் பெருவெற்றி ஒன்றைத் தமிழினத்துக்குப் பெற்றுக்கொடுத்தார்.

இன்று 'இரண்டாவது ஈழப்போர்' என்ற பகுதியூடாக எமது போராட்ட வண்டி, சிங்களப் படையணிகளுக்கு பேரிழப்புக்களை ஏற்படுத்திக்கொண்டு - எமது நிலங்களை விடுவித்துக்கொண்டு - உறுதியான ஒரு தளத்தில் இறுதி வெற்றியை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

* * *

பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிப் பகுதியையும் தந்தை செல்வா காலத்தின் முழுப்பகுதியையும் நேரடியாகத் தரிசித்து விட்டு இப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கும், எமது சமூகத்தின் மூத்த உறுப்பினர் திரு. நாக. பத்மநாதன் அவர்கள், பலாலிவான் தளத்தினுள் கரும்புலிகள் புகுந்து நடாத்திய வீரசாதனையை பத்திரிகையில் படித்துவிட்டுச் சொன்னார்......

"இராணுவ சீருடைகளையும் கவச வாகனங்களையும் விமானங்களையும் கண்டு தமிழர் பயந்தோடிய ஒரு காலத்தை நான் பார்த்திருக்கின்றேன்; ஆனால்...... தமிழனைக் கண்டு இராணுவ சீருடைகளும் கவசவாகனங்களும் விமானங்களும் பயந்தோடும் ஒரு காலத்தை, இப்போது பார்க்கிறேன்.

இது பிரபாகரன் உருவாக்கியகாலம்."

*பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதிப் பகுதியையும் தந்தை செல்வா காலத்தின் முழுப்பகுதியையும் நேரடியாகத் தரிசித்து விட்டு இப்போதும் வாழ்ந்துகொண்டிருக்கும், எமது சமூகத்தின் மூத்த உறுப்பினர் திரு. நாக. பத்மநாதன் அவர்கள், பலாலி வான் தளத்தினுள் கரும்புலிகள் புகுந்து நடாத்திய வீரசாதனையை பத்திரிகையில் படித்துவிட்டுச் சொன்னார்.........*

*"இராணுவ சீருடைகளையும் கவச வாகனங்களையும் விமானங்களையும் கண்டு தமிழர் பயந்தோடிய ஒரு காலத்தை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால்...... தமிழனைக் கண்டு இராணுவ சீருடைகளும் கவசவாகனங்களும் விமானங்களும் பயந்தோடும் ஒரு காலத்தை, இப்போது பார்க்கிறேன்.*

*இது பிரபாகரன் உருவாக்கிய காலம்."*

# மூழ்கடிக்கப்பட்ட கடற்படைக் கலங்கள்

*நீங்கள் தனித்தமிழ்நாட்டைப்பற்றியா கதைத்துக்கொண்டிருக்கின்றீர்கள். ஊர்காவற்றுறைக் கடலில் அல்லது காரைநகர் கடலில் தரித்து நின்றபடி, சிறீலங்கா கடற்படையின் ஒரு கப்பல் பத்துக் குண்டுகளை வீசினால், உங்களது தமிழீழம் கடலினில் அமிழ்ந்துவிடுமே?*

திரு. மு. சிவசிதம்பரம், திரு. வி. நவரத்தினத்திற்குச் சொன்னதாக, தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் – வீழ்ச்சியும் என்ற ஆங்கில நூலிலிருந்து (பக். 282).

ஒரு இருபத்தைந்து வருடங்களுக்கு முன், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய ஒரு தமிழ் அரசியல்வாதி வைத்திருந்த கருத்து அது. சிங்களவன் அடிப்பான் – கொல்லுவான் என்று அஞ்சியபடி தமிழினத்தை அடிமை வாழ்வுக்குப் பழக்கப்படுத்த முயன்ற, ஒரு கையாலாகாத தலைமையின் வாக்குமூலம் அது. அப்போது சிங்களக் கடற்படையின் பலம் இப்போதிருப்பதைவிடக் காற்பங்கே என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவாளர் மு. சிவசிதம்பரம் அன்று கூறியிருந்தபடி இதுவரை தமிழீழம் மூழ்கவில்லை என்பது பெரிய விடயமல்ல. அவர் குறிப்பிட்ட அந்தக் கடற்பரப்பில் நங்கூரமிட்டபடி இளைப்பாற சிங்களக் கடற்படைக் கப்பல்கள் இன்று அஞ்சுகின்றன என்பது, ஒரு யுக மாற்றம் அல்லவா......! அவர் கூறியதுபோல தமிழீழம் மூழ்கவில்லை; சிங்களக் கடற்படையின் கப்பல்கள்தான் மூழ்கத் தொடங்கியுள்ளன.

88 போர்க்கலங்களையும், 10, 400 மாலுமிகளையும் கொண்ட சிங்களக் கடற்படை, கடந்த 4 வருடப் போரில் பாரிய இழப்புக்களைச் சந்தித்து விட்டது.

போர்க்கப்பல்கள், சண்டைப் படகுகள் ...... என்று 15 கடற்கலங்களை அது இழந்துவிட்டது. இது சிங்களக் கடற்படையின் கப்பற் பலத்தில் 15% என்பது குறிப்பிடத்தக்கது.

கண்காணிப்புக் கப்பல் ஒன்று, ஆழ்கடல் ரோந்துக் கப்பல் ஒன்று, விநியோகக் கப்பல் ஒன்று, சுப்ப டோரா ஒன்று, நீருந்து விசைப்படகுகள் ஒன்பது, மற்றும் கரையோர ரோந்துப் படகுகளான 'சீகாட்' ஒன்று, கூகர் ஒன்று என்பன மூழ்கடிக்கப்பட்டுவிட்டன.


அதேவேளை கட்டளைக் கப்பல்களான அபிதா, எடித்தாரா என்ற தாய்க் கப்பல்களும் 'சவட்டன்' என்ற கரையோர ரோந்துப் படகும் சாதாரண டோரா ஒன்றும் மற்றும் தரையிறக்கும் கலம்களும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டன.

இதேவேளை, 350பேருக்கு மேற்பட்ட கடற்படையினரும் இந்த நான்காண்டுப் போரில் கொல்லப்பட்டுவிட்டனர். இந்தக் குறுகிய காலத்தில், இவ்வளவு தொகையில் கடற்படையினர் கொல்லப்படுவது ஒரு சாதாரண நிகழ்ச்சி அல்ல.

நாகதேவன்துறை தளத்தில் சுமார் 300 பேர், சாகரவர்த்தனாவில் 23பேர், சுப்ப டோறா கப்பல் தகர்ப்பில் 13பேர், நீரேரிக் கடலில் நிகழ்ந்த கரும்புலித் தாக்குதல்கள் – கண்ணிவெடிகள் மற்றும் படகுச் சண்டைகளிலும் 20 பேருக்கும் மேல், நயினாதீவுக் கடலில் ஒரு படகு மூழ்கடிக்கப்பட்டதில் 7 பேர், இத்துடன் பல்வேறு கடற்சண்டைகளின் போதும் பலகடற்படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.


*(இக் கட்டுரையின் இன்னொரு பகுதி 14ம் பக்கத்தில்)*

# முற்றாக மூழ்கடிக்கப்பட்ட கடற் கலங்கள்



'சீகாட்'

22. 09. 1991 – தீவகக் கடற் பரப்பில் 'சீகாட்' ரக கரையோர ரோந்துப் படகு மீது கண்ணி வெடித் தாக்குதல். படகு மூழ்கடிக்கப்பட்டது; இரு அதிகாரிகள் உட்பட 7 கடற்படையினர்பலி.




நீருந்து விசைப்படகு

29.12.1991 யாழ். நீரேரியில் கடற்படையின் ரோந்துப்படகொன்று மூழ்கடிக்கப்பட்டது.

26. 08. 1993 – கிளாலிக் கடல்நீரேரியில் நீருந்து விசைப் படகுகள் இரண்டின் மீது (மேஜர் வரதன், கப்டன் மதன்) கரும்புலித் தாக்குதல்; படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

10. 11. 1993 – பூநகரி கூட்டுத்தளம் மீதான 'தவளை'த் தாக்குதலில், ஐந்து நீருந்து விசைப்படகுகள் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன (கரும்புலிகள் மேஜர் கோபி, மேஜர் கணேஸ்).

30-08-1992 மண்டைதீவிலிருந்து ஒரு நீருந்து விசைப்படகு கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டது.



'கூகர்'

01. 10. 1991 – நயினாதீவு கடற்படை முகாமிலிருந்து காரைநகர் கடற்படை முகாமிற்கு ரோந்து சென்ற 'கூகர்' ரகப் படகுதாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது.

## மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் மொத்த எடை


| | | |
|---|---|---|
| கண்காணிப்புக் கப்பல் | 6300 | தொன்கள் |
| சாகரவர்த்தனா | 330 | ,, |
| ஓசன்றேடர் | 1200 | ,, |
| சுப்ப டோறா | 54 | ,, |
| நீருந்து விசைப்படகுகள் – ஒவ்வொன்றும் 5 தொன்கள் வீதம் 9 படகுகள் (கைப்பற்றப்பட்டவை உட்பட). | 45 | ,, |
| கூகர் படகு | 8 | ,, |
| | 7937 | தொன்கள் |

இந்த நான்காண்டுப் போரில் சிங்களக் கப்பற்படை மீது கடற்புலிகள் நடாத்திய தாக்குதல்களால், மொத்தம் 7937 தொன்கள் நிறையுடைய கப்பல்களை சிறீலங்காக் கடற்படை இழந்துவிட்டது.




சுப்ப டோரா

29. 08. 1993 – பருத்தித்துறைக் கடலில் ஒரு சுப்ப டோரா விசைப்படகு மீது ( மேஜர் புவீந்திரன், கப்டன் மணியரசன்) கரும்புலித் தாக்குதல். டோரா மூழ்கடிக்கப்பட்டது; 5 அதிகாரிகள் உட்பட 13 கடற்படையினர் பலி.




'சாகரவர்த்தனா'

19. 09. 1994 – சிலாவத்துறைக் கடலில் 'சாகரவர்த்தனா' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பல் மீது (லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் வாமன், கப்டன் லக்ஸ்மன்) கரும்புலித் தாக்குதல். கப்பல் மூழ்கடிக்கப்பட்டது; 25 கடற் படையினர் பலி.



கண்காணிப்புக் கப்பல்


16. 08. 1994 – காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற கண்காணிப்புக் கப்பல் மீது (கப்டன் அங்கயற்கண்ணி) கரும்புலித் தாக்குதல்; கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.



'ஓசன்றேடர்'


09. 10. 1994 – வெற்றிலைக்கேணி கடலில் 'ஓசன்றேடர்' என்ற விநியோகக் கப்பல் மீது நேரடித் தாக்குதல்; கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

# சேதமாக்கப்பட்ட கடற் கலங்கள்




கட்டளைக் கப்பல்

10. 09. 1990 – வல்வைக் கடலில் 'எடித்தாரா' கட்டளைக் கப்பல் மீது (மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத்) கரும்புலித் தாக்குதல். 04-05-1991 அன்று 'அபிதா' கட்டளைக் கப்பல் மீது (கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன்) கரும்புலித்தாக்குதல். கப்பல்கள் சேதமாக்கப்பட்டன; திருத்தப்பட்டபின் இப்போது சேவையில் உள்ளன.




கரையோர ரோந்துப்படகு 'சவட்டன்'

27.02 1992 – தாளையடி கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையின் ' சவட்டன் ' ரக படகு மீது துணிகர அதிரடி, படகு பலத்த சேதமடைந்திருந்தது.



சாதாரண டோரா

03. 03. 1992 – மாதகல் கடலில் டோரா மீது கண்ணி வெடித்தாக்குதல்; சேதமடைந்த நிலையில் திருக்கோணமலைக் கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.



தரையிறங்கு கலம்

08. 11. 1994 வெற்றிலைக்கேணிக் கடலில் தரையிறக்கும் கலம் மீது (கரும்புலி மேஜர் வித்தி) கரும்புலித் தாக்குதல்; கலம் பலத்த சேதமடைந்தது.

# கப்டன் லக்ஸ்மன்

## அவனில்லாமல் போனால் அடிப்பதற்கு வேறுவீரர்கள் தயாராய் இருந்தனர். ஆனால்...

வெடிவாயன் -

பொருத்தமான பெயர்.

கூப்பிட்டால் செல்லமாகக் கோபித்து, ஒற்றைக் காலில் கலைப்பான்.

தச்சன்காட்டில் - பலாலிப் பெருந்தளத்தின் ஒருபகுதிக் காவல் வியூகத்தை உடைத்தெறிய முனைந்த ஒரு தாக்குதலில் -

கை எலும்புகளையும் நொருக்கி, வாய்ப் பகுதியையும் பிய்த்துக்கொண்டு போய்விட்டன துப்பாக்கிச் சன்னங்கள்.

ஒரு தண்டு இல்லாமல்போய், ஒரு பக்கமாய் இழுபட்டு, நெளிந்துபோயிருந்த வாயால் அவன் பேசும்போது, பார்க்க அழகாய்த்தான் இருக்கும்.

அது மழலைக் குரல்.

பண்டத்தரிப்புக்குப் பகைவன் நகர்ந்த சண்டையில் காலை இழந்தவன், 'பலவேகய - 2' சண்டை துவங்கியபோது பொய்க்கால் பொருத்திகொண்டு ஆனையிறவுக்கு ஓடினான்.

இயக்கச்சியில் வைத்து, அடிக்காத குறையாய் துரத்திக் கலைத்த தளபதியோடு சண்டை பிடித்துகொண்டுதான் அவன் திரும்பி வந்தான்,

'மணியந்தோட்டம் - 2' பயிற்சி முகாம், நான்காண்டுகளுக்கு முன்னர் லக்ஸ்மனை போரிற்குத் தயாராக்கியது.

யாழ்ப்பாணக் கோட்டைதான் அந்த வீரனின் முதற் களம்.

மாங்குளம், சிலாபத்துறை, ஆனையிறவு, மணலாறு, காரைநகர், பலாலி -

பகைவன் கூடாரமடித்த இடங்களிலெல்லாம் அந்த வீரன் போர் தொடுத்தான்.

குடிமகனொருவன் தன் தாய் மண்ணுக்காகச் செய்யக்கூடிய அதியுயர் தியாகத்தைத் தான் செய்யவேண்டுமென்ற வேட்கையை, சுவாசப் பையில் சுமந்துகொண்டு திரிந்தான் அந்தக் கரும்புலி.

அந்தச் சந்தர்ப்பத்திற்காக அவன் கடல் மடியில் தவம் கிடந்த நாட்கள் ஏராளம்.

சதுரங்கப் பலகையில் - தனது சேனையை மதிநுட்பத்தோடு வழி நடாத்தி, எதிராளிகளின் அரசர்களை முற்றுகையிட்டு, முறியடித்து விழ்த்துகிற அந்தச் சதுரங்க வீரன -

கற்பிட்டிக் கடலில் - ஒரு கரும்புலியாக எதிரியின் 'கடல் அரசனைத்' தகர்த்து மூழ்கடித்தான்,

'ஆசிர்' கடற்பயிற்சிப் பாசறையில் தளபதி சாளஸ் வனைந்தெடுத்த கடற்புலி வீரர்களுள், லக்ஸ்மனும் ஒருவன்.

கிளாலிக் கடற்களத்தில் அந்த வீரத் தளபதி வீழ்ந்தபோது, அவனது கைகளில் வளர்ந்த இந்தக் கரும்புலிக் குழந்தைகள் வெகுண்டெழுந்தார்கள்.

சுட்டெரித்துச் சாம்பராக்க எங்கள் கடலெங்கும் பகைவனைத் தேடியலைந்தார்கள்,

பருத்தித்துறையில் 'சுப்படோறா' வைத் தகர்த்தபோதும், இதயத்தில் விழுந்த அந்த ஆழமான காயம் ஆறவேயில்லை.

பள்ளிக்கூட மைதானத்தில் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருக்கும் பையன்களைக் கைதட்டிக் கூப்பிட்டு -

"கிரிக்கற் பந்து எவ்வளவு நிறை இருக்க வேண்டும்?" என்பான்.

பதில் தெரியாமல் முழித்து, அப்பாவித்தனமாய்ச் சிரிக்கும் பையன்களைப் பார்த்து - "110 கிராம் தம்பி" - சொல்லிவிட்டு வருவான்.

அவனைப் பெரிய அறிவாளி என்று சொல்வதற்கில்லை; ஆனால், எவரோடும் எதைப் பற்றியும் கதைக்கக்கூடிய அளவுக்கு அவன் இருந்தான்.

அது அவனது சிறப்பு இயல்புகளில் ஒன்று.
வீட்டுக்கு வெளியில், நாட்டுக்கு வெளியில், பூமிக்கு வெளியில், எங்கள் ஞாயிற்றுத் தொகுதிக்கு வெளியில், எல்லையற்ற இந்தப் பிரபஞ்சத்தின் வெளியில் - மானிடன் கண்டுபிடித்த எல்லாவற்றையும் பற்றித் தானும் அறிந்திருக்க வேண்டும் என்ற முனைப்பும் முயற்சியும் கொண்டவன் லக்ஸ்மன்.

அந்த ஆர்வத்தினால் -

எல்லாவற்றையும் பற்றித் துருவித் துருவி ஆராய்வான்.

'றாடர்' படிப்பிக்க வந்தவர் குழம்பியே போனார்- அவன் குடைந்த குடையலுக்கு பதில் சொல்ல முடியாத அளவுக்கு.

"பிரண்டவன்"

நீண்டகால அனுபவம் பெற்றிருந்தவர்களை விடவும் குறுகிய காலத்திற்குள் அவன் பெற்றிருந்த திறமை, எங்களை ஆச்சரியப்படவைத்தது.

கடற்புலிகளின் சிறந்த படகோட்டிகளுள் ஒருவனென அவனைச் சொல்ல முடியும்.

இன்னதென்று இல்லாமல், என்னவிதமாக வடிவமைக்கப்பட்ட படகையும் தனது கைகளுக்குள் அவன் வசப்படுத்துவான். உருவாக்கப்படும்போது சமநிலை தவறிவிட்ட ஒரு படகை எல்லோரும் கைவிட்டுவிட, கிளாலியில் - அவன் தான் கையிலெடுத்துக் கடலில் இறக்கினான்.

தாக்குப்பிடிக்க முடியாமல் தலைதெறிக்க ஓடினான் பகைவன்.

லக்ஸ்மனின் படகு உறுமிக்கொண்டு தண்ணீரில் ஓடும் - 'அக்சிலேற்றரை'க் கூட்டி அவன் வேகமூட்டும்போது, அணியம் குத்தி நிமிரும் - படகு தாவிக் கடந்து பாயும்.

உடலைச் சரித்து, 'ஸ்ரியறிங்கை' அவன் வளைத்துத் திருப்புகிற லாவகத்தில், படகு பக்கவாட்டில் சரிந்து வளையும் - தண்ணீர் அள்ளித் தெறிக்கும்.

இயந்திர இயக்கத்தை அவன் உச்சப் பயன்பாட்டுக்கு உயர்த்த, படகு அசுர வேகத்தைப் பெறும் - அலை கிழிந்து வழிவிடும் -

கடல் பிளக்கும்.

நெளிந்த வாயை இன்னும் நெளித்து அவன் ஆனந்தமாய்ச் சிரிப்பான்.

அந்தி சாய்கிற செவ்வானப் பின்னணியில் ... ஆகா! அது ஒருகண்கொள்ளாக் காட்சிதான்.



ஒரு கரும்புலி வீரன், வாழ்வில் எதற்குமே கவலைப்படமாட்டானாம்; ஒரே ஒரு விடயத்தைத் தவிர. தான் தாக்குகிற இலக்கு முக்கியத்துவம் குறைந்ததாக இருந்துவிடக்கூடாது என்பது மட்டுமதான், ஒரு கரும்புலி வீரனுக்குக் கவலையாக இருக்குமாம்.

ஒரு கரும்புலி வீரனென்ற வகையில் தனக்குள்ளிருந்த அந்த மன ஏக்கத்தை அந்த நண்பன் எங்களுக்கு இடைக்கிடை சொல்வதுண்டு.

நெடுநாளாய் அவர்கள் தேடிய பெரிய இலக்கு, வசதியாய்க் கடலில் வருவதாக வேவு வீரர்கள் தகவல் தந்த ஒரு மாலைப் பொழுது.

தனது அன்புத் தங்கையின் 'சாமத்திய வீட்டுக்குப்' போகப் புறப்பட்டுக்கொண்டிருந்தான் அந்த அண்ணன்.

ஆசைத் தங்கை, அதிலும் ஒரு நல்ல நாள்; அண்ணன் வருவான் என்று அவள் காத்துக்கொண்டேயிருப்பாள்; இனி ஒருபோதும் பார்க்கக் கிடைக்காமலும் போகலாம்.... அங்கேயும் போகவேண்டும்.

பெற்றெடுத்த தேசம்; பிணங்களாய் தினம் ஒதுங்கும் எமதினிய மக்கள்; பகைவனின் ஆளுகையில் எம் கடல்; தேடி அலைந்த இலக்கு; தவறவிட்டுவிடக்கூடாத ஒரு சந்தர்ப்பம்... இங்கேயும் நிற்க வேண்டும்.

அவனில்லாமல் போனாலும் அடிப்பதற்கு வேறு வீரர்கள் தயாராகவும் இருந்தார்கள்.

ஆனாலும் அந்தத் தர்மசங்கடமான நிலைக்கு அவன் சுலபமாக முடிவெடுத்தான்.

அந்தத் தளபதியின் நினைவோடு ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிக் கல்லூரியில் பயின்று வெளியேறிய மாணவர்களதான் -

சிலாபத்துறையில் - பகைவனின் மடியில் நெருப்பு மூட்டினார்கள்;

'சாகரவர்த்தனா' வைச் சாகடித்துச் சாதனை படைத்தார்கள்.

லக்ஸ்மன் இயல்பாகவே கெட்டிக்காரன்.

விசயம் தெரிந்தவன்.

அநேகமாக - பொதுவான எல்லா விடயங்களைப பற்றியும் அவனது மூளைகுள் பதிவுகள் இருந்தன.

மூகாமிற்குப் பொருள்கள் ஏற்றிவரும் உழவுப்பொறி ஐயாவைப் பார்த்து. "நடுப்பெரிய சில்லு ரெண்டுக்கும் எத்தினை கிலோ காத்து?" என்பான்.

ஐயா தலைசொறிந்து நிற்க, "பெரிய சில்லுகள்தானே, எப்படியும் 150, 200 கிலோ வரும்" என நாங்கள் நினைக்க -

"40 கிலோ தானய்யா......கனக்க இல்ல" - மேதாவியாய் பதில் சொல்லுவான்.

'பிரணவன்' என்ற அவனது இயற்பெயரை நாங்கள்தான் இப்படி மாற்றினோம்!

பிறந்தது 05.07.1974 இல்.

ஊர் நல்லூர்; சங்கிலி மன்னனின் பழைய இராசதானி.

படித்தது யாழ்ப்பாணம் 'ஸ்ரான்லி கல்லூரி'யில்

கிரிக்கற் பைத்தியம்-

வீட்டில் துடுப்போடும் பந்தோடும்தான் படுக்கைக்குப் போவானாம்.

லக்ஸ்மனுக்கு தச்சன்காட்டுச் சண்டையில் வெடிபட்டு, ஒரு கையில் இயக்கம் இல்லாமல் போய்விட்டது

பண்டத்தரிப்பில் மிதிவெடி வெடித்து ஒரு காலின் பாதம் சிதைந்துபோய்விட்டது.

இருந்தபோதும் -

கடலில் இறங்கி, தோழர்களின் தோள்களைப் பற்றி மெல்ல மெல்ல நீந்தப் பழகியவன் - கொஞ்சக்காலத்திற்குப் பிறகு, தன்னந்தனியாக நீந்திக் கடந்த தூரம் 5 கடல் மைல்கள்.

லக்ஸ்மன் நல்லதொரு படகோட்டி.

படகைத் தயார்செய்து கடலில் இறக்கினான்.

நல்ல காலம் ...பகைவனுக்கும் அவனது தங்கைக்கும் நல்ல காலம் - காலநிலை வாய்ப்பாக அமையாததாலும் வேறு காரணங்கள் தடையாக வந்ததாலும் பகைவன் தப்பிவிட்டான்.

மறுநாள்தான் தளபதிக்கு விசயம் தெரிந்தபோது - அவனைத் துரத்திக் கலைத்தார் வீட்டுக்கு.

இதேபோலவேதான் -

இன்னொரு நாள், இன்னொரு முனை, இன்னொரு இலக்கு, இன்னொரு தயார்ப்படுத்தல், இன்னொரு தங்கைக்குச் 'சாமத்திய வீடு.'

மீளவும் ஒரு இக்கட்டான நிலை -

புறப்படுவதற்கு முன்னாலிருந்த சின்ன இடைவெளிக்குள் -

ஓடோடி வீட்டுக்குச் சென்று, எல்லாரோடும் ஒன்றாயிருந்து, அன்புத் தங்கையை ஆரத் தழுவி முத்தமிட்டு விடைபெற்றுப் போனவன்......போனதுதான்.

காத்துக்கொண்டிருந்தவர்களுக்கு - சிலாபத்துறையில் கப்பலடித்த அந்தச் செய்திதான் வந்தது! ○

# கப்டன் வாமன்



**நெடுநாளாக எனது மனதில் கிடந்த இந்த மிகப் பெரிய ஆசை நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டது**

வாமன்!

அவனொரு நல்ல மனிதன்.

அதற்கு அப்பால் - எங்களுக்கு ஒரு அற்புதமான நண்பன்.

தனித்த சிலரோடு மட்டுமல்லாமல், பரந்து எல்லாரோடுமே நட்பைப் பேணிய ஒரு சிறந்த பண்பாளன்.

கூட இருந்த அத்தனை பேரிலுமே அன்பு கொண்டிருந்த அதே நேரத்தில், அக்கறையாகவும் இருந்த உற்ற தோழன்.

எந்த நேரமும், ஏதோ ஒரு வகையில் தன்னால் இயன்ற அளவுக்கு எங்களுக்கு உதவிகள் செய்துகொண்டேயிருந்த துணைவன்.

எங்கிருந்து என்ன கதைத்துக்கொண்டிருந்தாலும், கடைசியில் அவன் முடிக்கும் இடங்கள் எப்போதும் இரண்டு விடயங்களைத் தொனிப்பொருளாகக் கொண்டிருக்கும்.

ஒன்று, எங்களை நல்வழிப்படுத்துகிற விதமான நல்ல புத்திமதிகள்- அறிவுறுத்தல்கள் - ஆலோசனைகள்.

அடுத்தது, கரும்புலித் தாக்குதல்கள்; இலக்குகள்: வழிமுறைகள்; உத்திகள்.

'' நல்லதான ஒரு வாழ்வைத் தந்தருள்க!'' என்று கடவுளிடம் மன்றாடித் திரியும் எங்கள் சமூக வாழ்வியக்கத்துக்குள்ளிருந்துதான் அவனும் புறப்பட்டான்.

ஆனால் -

'' நல்லதான ஒரு சாவைத் தந்தருள்க!'' என்றுதான், இறைவனின் சன்னிதானங்களில் அவன் இரந்து வேண்டிக்கொண்டு திரிந்தான்.

ஒரு கரும்புலித் தாக்குதல் வாமனின் கனவு!

ஒரு கரும்புலித் தாக்குதலே வாமனது நினைவு!

பகைவனின் நெற்றியில் வெடிக்கும் ஒரு தாகத்தைத் தாங்கியே அவனது சொல், செயல், சிந்திப்பு எல்லாமே.

தளபதிகளுக்கு அலுப்புக் கொடுத்துக் கொடுத்து, ஒருவழியாக அந்த வாய்ப்பைப் பெற்றபோதும், அவனுக்குரிய சந்தர்ப்பம் சரிப்பட்டு வராமல் இழுபட்டுக்கொண்டே போனபோதுதான் -

கடவுளின் திருப்பாதங்களில்கூட போய் விழுந்து வேண்டத் துவங்கினானாம்.

சாவும், அழிவும், பட்டினியும், துயரமுமே நாளாந்த வாழ்வாகிப் போன தமிழீழத்தின் தென் பிராந்தியத்திலிருந்து, இழப்புக்களால் உரமேறி வந்தவன்தானே அவன்!

அதனால்தானாக்கும் - அப்படி ஒரு சுதந்திர வேட்கை அவனுக்குள் இருந்திருக்கின்றது.

இந்தியர் காலம் -

எங்கள் போராட்ட வரலாற்றின் இருண்ட பதிவு.

அதுவரை - தானுண்டு, தன் வீடுண்டு என இருந்தவன் அதன் பிறகு - தனக்கென ஒரு நாடும் உண்டு என்று புலியாகி வந்தான்.

இருபதாண்டுகளுக்கு முன்னால் ஒரு இரவு'

கோயில்போரதீவு கிராமத்தில் ஒரு சின்னக் குடிசை.

தொட்டிலில் ஆடி, '' குவா குவா '' சத்தத்தோடு கண் சிமிட்டினான் அந்தக் குழந்தை.

ரவிக்குமார் - ஆசையாக அவர்கள் இட்ட திருநாமம்.

அப்பா கந்தசாமி; அம்மா யோகம்மா.

வீட்டில் - பூர்வீகச் சொத்து என்று சொல்ல அவர்களிடம் இருந்தது, வறுமை ஒன்றுதான்.

பாவம்.

தன்னந்தனியாக எல்லாப் பாரங்களையும் தலையில் சுமந்தார் தந்தை,

தாயின் மடியில் அழகாய்ச் சிரித்த அந்தக் குழந்தை, தாயக மடியில் தவழ்ந்து, விழுந்து விழுந்து, எழுந்து நிமிர்ந்து உயர்ந்தபோது - சலசலத்து ஓடும் அந்த எழிலான அருவிகளில் குதித்து நீராடி மகிழ, அவனுக்கு நேரமிருக்கவில்லை.

பள்ளிக்கு நடந்த பிஞ்சுப் பாதங்கள், மீதி நேரங்களில் - வயலுக்கு நடக்கவேண்டியிருந்தது.

சின்னப் பையன் - மாடாய் உழைத்தான்.

வரம்புகளுக்குள்ளே - வியர்வைச் சகதியில் வறுமை மூழ்க, மெல்ல மெல்ல அவர்கள் உய்யத் துவங்கினார்கள்.

இந்திய நெருக்கடி: அடிவருடிகளின் அநர்த்தங்கள்; நிம்மதி இழந்துபோன வாழ்வு.

திடீரென -

அந்தக் கிராமத்திலிருந்து கொஞ்சம் இளையோரைக் காணவில்லை.

மூதூரின் அடர்ந்த காடு.

நெடித்துச் சடைத்த, தடித்த மரங்களின் கீழ் அவர்கள் களைத்தார்கள்.

இந்தியர்கள் வளைத்துத் தாக்கியபோதும், இடமாறி இடம்மாறி அதற்குள்ளேயே.

ஓடி...... கயிறேறி...... மூடை தூக்கி...... ' சயிட்றோளில ' வாந்தியெடுத்து, 'குறோள்' இழுத்துப் பய்ந்த முழங்கையில் ரத்தம் ஒழுக ஒழுக அணிவகுத்து...... அணி நடந்து...... புலிக் கொடியின் கீழ் உறுதிப் பிரமாணம் எடுத்து......

சீரான உணவில்லை, ஒழுங்கான உறக்கமில்லை, தேவையான உடையில்லை, நோய்க்கு மருந்துமில்லை, நிலையாக ஒரு இடமுமில்லை..... ஆனாலும் ஓயாத பயிற்சி.

முடிந்தபோது - தளராத புலிகளாகக் களமாடத் தயாராக உருவாகியிருந்தனர் அவர்கள்.

ரி. 56 உம் கையுமாக வெளியில் வந்தான் வாமன்.

மண்டூர் அவனது முதற்களம்.

இரும்புப் பாலத்தடியில் ஒரு பதுங்கித் தாக்குதல்.

இலக்கு - இந்திய வல்லரசின் ஒரு தரைப் படை ரோந்து அணி.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைசிறந்த சேனாதிபதிகளில் ஒருவரும், தென் பிராந்தியத் துணைத் தளபதியுமான லெப்ரினன்ற் கேணல் நீகன், களத்தில் நின்று வழி நடாத்திய அதிரடி.

நடு வீதியில் -

30 இந்தியச் சிப்பாய்கள் பிணங்களாய்ச் சுருண்டார்கள்.

தென் தமிழீழத்தின் நிகழ்வுகள் பற்றித்தான், எப்போதும் அந்த மைந்தனுக்குப் பெரிய கவலைகள்.

கடற்கரை மணலில் நடந்து கால் நனைக்கிறபோது, பக்கத்தில் நடந்து கதைகள் சொல்லுவான்; சண்டைப் படகின் இயந்திரத்தைப் பழுது பார்க்கிறபோது, அருகில் அமர்ந்து சோகம் சொல்லுவான். ' பிப்ரி கலிபரை ' கழற்றித் துப்புரவு செய்கிறபோது, கூட இருந்து துயரம் விவரிப்பான்.

சிதைந்தழிந்துபோய்க் கிடக்கும் எங்கள் மண்ணில் அந்த இன்னொரு துருவத்தை, கண்களுக்கு முன்னால் அவன் விவரிப்பான்.

உயிருக்குள் இரத்தம் வடியும்.

'' அந்தச் சனங்கள் பாவம் மச்சான் '' எனும்போது -

அவனைப் பார்க்கப் பாவமாய் இருக்கும்.

'' அங்கையும் நாங்கள் கரும்புலித் தாக்குதல்களைச் செய்யவேண்டும்; அப்பதான் சிங்களவனைக் கலைக்கலாம்.''

அவனுக்குள் அது பெரியதொரு ஆசை - வேட்கை.

சுகயீனமாக மருத்துவமனையில் படுத்திருந்தவனுக்கு, பூநகரி அடிக்கும் சேதியைச் சொன்னான் பார்க்கப்போன ஒரு நண்பன்.

துள்ளிக் குதித்துக்கொண்டு முகாமிற்கு அன்றே வந்து சேர்ந்துவிட்டான் வாமன்.

' ஒப்பறேசன் தவளை '

பாசறையில் படையெடுப்புக்கான தயார்ப்படுத்தல்.

தளபதி குழுக்களை ஒழுங்குபடுத்தியபோது, அமைதியாக நின்று பார்த்துக்கொண்டிருந்தவன்-

தாக்குதல் அணி எதிலும் தான் சேர்க்கப்படாததைக் கண்டதும் இடையில் புகுந்து சண்டை பிடித்தான்.

''தம்பி உனக்கு ஏலாதெண்......'' சொல்லி முடிக்க விடாமல் கரைச்சல் தந்தான்.

ஆய்க்கினை தாங்க முடியாமல் அவனையும் ஒரு அணியோடு இணைத்தார் தளபதி.

கனரக ஆயுதப் பிரிவில் அவன்.

பயிற்சிகள்.

மாதிரி உரு இலக்கை அவனது 'லோ' அடி, இம்மியும் பிசகாமல் நொருக்கியபோது -

தலைவர் தோள்களில் தட்டி வாழ்த்தினார்

இளம்புரியாத தெம்பு.

சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்த நாள்.

நாகதேவன்துறை நோக்கிய ஒரு நீரூடகத் தாக்குதலணியில் வாமன்.

அந்த வரலாற்றுச் சிறப்பான நிலத்தை நோக்கி, எங்கள் வரலாற்றுப் பெருமைமிக்க படையெடுப்பு.

72 மணி நேரத்தின் பின் அங்கிருந்து நாங்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது, உலகம் பூநகரி பற்றியும் புலிகளைப் பற்றியுமே பேசிக்கொண்டிருந்தது.

வந்ததன் பின்னர்தான் கரும்புலித் தாக்குதலுக்கான அவனது நச்சரிப்பு உச்சநிலை அடைந்தது.

அண்மைக்காலம்.

அவன் தாக்குதலுக்காகக் காத்திருந்த நாட்கள்.

'' இனி என்ன மச்சான் பேச்சுவார்த்தை துவங்கப் போகுது, சமாதானம் வரப்போகுது, உனக்கு இடிக்க சந்தர்ப்பம் கிடைக்காது......''

நாங்கள் சுற்றிவர இருந்து அவனைக் கிண்டல் செய்வோம்.

'' ஐயோ மச்சான் அப்படியெல்லாம் சொல்லாதேங்கோடா. என்னால தாங்கேலாது'' - உண்மையிலேயே வேதனைப்பட்டான்.

குலுக்கல்முறையில் தெரிவாகிய கரும்புலி வீரர்களுக்குள்ளும் அவன் எடுபடவில்லை.

அந்த நேரத்தில் அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

காலில் விழாத குறையாகக் கெஞ்சினான்; தானே தான் இடிக்கவேண்டும் எனத் தளபதியிடம் வேண்டினான்.

அவர்களில் யாருக்குத்தான் மனமில்லை; எல்லாரும் முரண்டு பிடித்தார்கள்; அத்தனை பேரும் '' நானே '' என்று நின்றார்கள்.

இந்த அபூர்வம் - பூலோகத்தில் புலிகளிடம் மட்டுமே காணக்கூடிய ஆச்சரியம்.

பிரபாகரனின் பிள்ளைகளிடம் மட்டுமே பார்க்கக்கூடிய அதீத தேசப்பற்றின் வெளிப்பாடு.

இறுதியில் -

தளபதியின் சொல்லுக்கிணங்க அவனுக்காக விட்டுக்கொடுத்து மற்றவர்கள் ஒதுங்கினார்கள்.

கடற்புலிகளுக்கு வாமன் வந்த புதிதில் -

நீந்துவதிலிருந்து, படகோட்டுவதிலிருந்து, அவனுக்கு எல்லாவற்றையும் சொல்லிக்கொடுத்தது லக்ஸ்மன்தான்.

## எங்கள் கடல்

தமிழீழம் என்பது நிலப்பரப்பை மட்டும் உள்ளடக்கிய விடயம் என்று பலரும் கருதுவது தவறு. தரையைப்போல பிரமாண்டமான ஒரு கடற்பரப்பையும் கொண்டமைந்தது தான் எங்கள் தமிழீழத் தாயகம். இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்லப்போனால், எமது தாயகத்தின் நிலப் பரப்பைவிட கடற்பரப்பின் விஸ்தீரணம் அதிகமானது என்ற பேருண்மையை, எமது மக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஏறக்குறைய 1200 கி. மீற்றர் நீளமான கடற்கரையைத் தமிழீழம் கொண்டிருக்கின்றது.

ஒரு நாட்டின் கடற்கரையிலிருந்து 19 கி. மீற்றர் தூர கடற்பரப்பு, குறித்த அந்த நாட்டிற்குச் சொந்தமானது என்று, சர்வதேச சட்டங்கள் வலியுறுத்துகின்றன. இதன் படி ஏறக்குறைய 23,000 சதுர கிலோமீற்றர் பரப்பளவான கடற்பரப்பு தமிழீழத் தாயகத்தின் ஒரு அங்கமாக இருக்கின்றது. அதேவேளை தமிழீழத்தின நிலப்பரப்பு ஏறக்குறைய 19,000 சதுர கி. மீற்றர் ஆகும். எனவே, தமிழீழத் தாயகத்தைப் பொறுத்தவரை கடற்பரப்பில்தான் அதன் பெரும் பகுதியுள்ளது. இக் கடற்பரப்பை நாம் வெற்றிகொண்டேயாகவேண்டிய அவசியத்தை இப்போது உணரக்கூடியதாக உள்ளது அல்லவா......?

ஆகக் கடைசியாக - சிலாவத் துறைக்கடல் சிலிர்த்த அந்தக்கரும் புலித் தாக்குதலைச் செய்தவரை!

வாமன்!

16 வயதுப் பராயத்தில் ஒரு போராளியாக எழுந்துவந்தபோதும் சரி -

பின்னர் - பகைவனை எதிர் கொண்ட சண்டைகளில் நெருப் பென நின்று களமாடிய போதும் சரி -

இடையில் - தன்னாமுனைச் சண்டையில் 'கால்கஸ்ரோ' ஷெல்லை விட்டதற்காக மாதக்கணக்கில் நின்று சமைக்கையிலும் சரி -

அடுத்து - எதிரியின் நெஞ்சுக்குள் வெடித்து வெல்லச் சந்தர்ப்பம் கேட்டு அழுதுகொண்டு திரிந்த நாட்களிலும் சரி -

எல்லாவற்றுக்கும் மேலாக - தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பிற்கான அதிசிறப்புப் படையணியில் ஒரு காவல் வீரனாய், அவரது நிழலென நின்றபோதும் சரி -

தேசத்தையும் தலைவரையும், மக்களையும் போராட்டத்தையும் அளவுகடந்து நேசித்த ஒரு உண்மை வீரன் அவன்.

கழுத்தில் கட்டிய 'சயனைட்'டுக்கு எப்போதும் விசுவாசமாகவும், நம்பிக்கையாகவும் வாழ்ந்த விடுதலைப் புலி.

தமிழீழத் தனியரசின் உருவாக்கத்திற்காக இதயசுத்தியோடு உழைத்து வாழ்ந்து, செத்த ஒரு அப்பழுக்கில்லாத போராளி.

கடைசியாகத் தலைவர் வழியனுப்பி வைத்தபோது - அவருக்கென்று வாங்கிப் பத்திரமாக வைத்திருந்த 'ரீசேட்' ஐ தன் அன்புப் பரிசாக அவருக்கு வழங்கினான்.


அவன் கடைசியாக வரைந்த மடலில் பின்வருமாறு குறிப்பிடுகிறான்:

"நான் அதிஸ்டசாலி என்றுதான் சொல்ல வேண்டும். இயக்கத்தில் சேர்ந்த காலத்தில் கணிசமான நாட்கள் நான் தலைவரோடுதான் நின்றேன் தலைவர் எம்மக்களைப் பற்றிச் சொல்லும் ஒவ்வொரு வசனமும் எனது நெஞ்சை உருக்கும், அப்போதெல்லாம், இந்த மக்களுக்காக நான் அளப்பரிய ஒரு தியாகத்தைச் செய்ய வேண்டும் என்ற எண்ணந்தான் எனக்குள் வரும்.

நெடுநாளாக எனது மனதில் கிடந்த இந்த மிகப் பெரிய ஆசை நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டது.

என்னைக் கரும்புலிக்கு அனுப்பும்படி எனது அன்புத் தளபதி சொர்ணம் அண்ணனுக்கு எத்தனையோ கடிதங்கள் எழுதினேன். ஆனால், நான் என் அன்புத் தலைவருக்கு ஒரு கடிதம்கூட எழுதவில்லை. ஏன் என்றால, என்னை வளர்த்த தலைவரோடு நான் இரண்டு வருடங்கள் அருகிலேயே வாழ்ந்தேன். அப்போதெல்லாம் நான் பார்த்திருக்கின்றேன், இரவும் பகலும், தனக்கு வரும் கடிதங்களை வாசித்து முடிக்கவே நேரமில்லாமல் அவர் கஸ்டப்படுவார். அவருக்கு இன்னும் கஸ்டம் கொடுக்க நான் விரும்பவில்லை.

எனக்கு இருக்கும் கடைசி ஆசை ஒன்றே ஒன்றுதான். எங்கள் தலைவர், பல்லாண்டு காலம் இந்த மண்ணில் எம் மக்களோடு வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் - நிச்சயமாக எமது இனத்துக்கு அவர் சுதந்திர தமிழீழத்தைப் பெற்றுக் கொடுப்பார். அந்த அசையாத நம்பிக்கையோடுதான் நான் இப்போது புறப்படுகிறேன்." ○



'சாகரவர்த்தனா'விலிருந்து கைப்பற்றப்பட்ட 'கடல் ஆவணங்கள்'; தலைவரும் தளபதியும் ஆராய்கிறார்கள்.

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

# இதுவரை தாக்கப்படாத கடற் கலங்கள்



குறைந்தது 120 துருப்புக்களைக் காவியபடி, மணிக்கு 30 கடல் மைல் (55 கி.மீ.) வேகத்தில் செல்லக்கூடிய **விரைவுத் துருப்பேற்றிகள்.**



**விரைவுப் பீரங்கிக் கப்பல்கள்:** 'வீரயா', 'சூரயா' போன்றன.

# கடற்படைத் தளபதியை கைது செய்த பெண்கடற்புலித் தளபதி

தமிழ்த் தேசிய இனத்தினது அரசியல் சுபீட்சத்திற்கான, ஆயுதம் தாங்கிய போராட்டத்தின் வரலாறு என்பது, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வரலாறுதான்.


இந்தப் புதிய சரித்திரத்தின் கதாநாயகனாய் முன்னின்று, தலைவர் பிரபாகரன் அவர்கள், விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்தி நகர்த்திச் செல்கின்றார்.

தமிழீழ தனியரசை நோக்கிய இந்த நெடு வழிப்பாதையில், பெரிய பெரிய கனவுகளோடு அவர் பிரசவித்த குழந்தைகளில் ஒன்றுதான் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்.

விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற பிரதான பரிமாணங்களில் ஒன்றான கடற்புலிகள் அமைப்பானது, எங்கள் சரித்திர ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறித்துவைக்கப்படவேண்டிய ஒரு அத்தியாயமாக ஆகிவிட்டது.

வரலாற்றுத் தொடரோட்டத்தில், யுத்தம் ஊடறுத்துச் செல்லும் இன்றைய நாட்களைக் குறிக்கும் ஒரு காலத்தின் பதிவாகவும், கடற்புலிகள் மகிமையைப் பெற்றுவிட்டனர்.

நிகழ்காலத்தில் - சிறீலங்காவுக்கு எதிரான இரண்டாவது யுத்தத்தினூடு முன்னேறிச் செல்லும் எங்கள் சுதந்திரப் போராட்டத்தை, வளர்ச்சியின் இன்னொரு கட்டப் பரிணாமத்திற்கு உந்தித் தள்ளியவர்கள் கடற்புலிகள் என்றால், அது மிகையானதல்ல.



**புதிய வழித்தடத்தின் சுவடுகள்; புதிய மாற்றமொன்றின் திறவுகோல்கள்.**

**கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி கரும்புலி லெப். கேணல் நளாயினி, கரும்புலி மேஜர் மங்கை.**

புரட்சியை அடிபணியச் செய்தல், அல்லது அழித்து ஒழித்து விடுதல் எனும் மூலோபாயத்துடன் - தமிழீழத்தின் தொண்டைக்குழியை நெரிப்பதைப் பிரதான தந்திரோபாயமாகக் கொண்டு - ஆகக் கடைசி வழியெனக் கருதி எதிரி வரைந்த போர்முறைத் திட்டமொன்றையும் - எங்களது கடல் வேங்கைகள்தான் முறியடித்தனர்.

பொருத்தமானதாகவும், மிகச் சரியாகவும் கணிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில், கடற்புலிகள் அமைப்புக்குப் புத்துயிர்ப்புக் கொடுத்து யுத்த அரங்கில் மேடை ஏற்றியதன்மூலம், யாழ்ப்பாண முற்றுகையை உடைத்தெறிவித்ததுடன், வரலாற்றில் சிறப்பான இந்தப் பாத்திரத்தை வகிக்கும் சந்தர்ப்பத்தையும் அவர்களுக்கு வழங்கிய பெருமை, தலைவர் அவர்களையே சாரும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய தமிழர்களின் சரித்திரத்தில், சோழப் பேரரசன் ராஜராஜனின் கடற்படை அந்த மன்னனுக்கு வெற்றிகளைப் பெற்றுக் குவித்துத் தந்து வரலாற்றைப் படைத்தது.

இன்று -

தமிழினம் மீளவும் எழுச்சிகொண்டுள்ள சரித்திரத் திருப்பவேளையில், தமிழினப் பெருந்தலைவன் பிரபாகரனின் கடற்படை மீண்டுமோர் வரலாற்றைப் படைத்து முத்திரைபதித்து வருகின்றது.

இக்காலத்தில் படைக்கப்படுகின்ற இந்தப் புதிய சரித்திரத்தில், முன்னைய எக்காலத்திலுமே இல்லாததாக ஒரு வரலாற்று அபூர்வம் பிறப்பெடுத்துள்ளது.

அதுதான் கடற்புலிகளின் பெண்கள் படையணியாகும்.

கடலோடிப்போன ஆண் உறவுகளைத் தேடி கரைகளில் கண்ணீர் வடித்து நின்ற எங்கள் பெண்டிரை, கடலேறிச் சென்று களமாட வைத்துப் புதியதோர் காவியம் படைக்கச் செய்தான் எங்கள் தலைவன்.

ஆரம்பத்தில் சிலர் நம்பிக்கையீனப்பட்டார்கள்; கடலும் - பெண்களும் சரிப்பட்டுவராத சமாச்சாரம் என்றார்கள்; கடல்சார் நடவடிக்கைகளிலும், கடற் சண்டைகளிலும் மகளிரை ஈடுபடுத்துவது சாத்தியமில்லாத சங்கதி என்று கருத்துச் சொன்னார்கள்.

தலைவர் மட்டுமே தளராதிருந்தார்.

அவரது சிந்தனையோட்டத்தில் முளைவிட்ட செயற்திட்டங்களையெல்லாம் புலிகள் இயக்கம் வீரசாதனைகளாகப் படைத்த பழைய வரலாறுகளின்போது, வெளி ஆட்களுக்கு அவையெல்லாம் நம்புவதற்கரிய ஆச்சரியங்களாய்த் திகழ்ந்தன.

அவற்றைப்போன்றதொன்றுதான் கடற்புலிகளின் மகளிர் படையணியுமாகும்.

தலைவரது ஆழ்மனக் குகைக்குள்ளிருந்து உதயசூரியனாகப் பிரகாசித்த எண்ணக் கருவைச் செயற்பாட்டுச் சாத்தியமாக்கி, தளபதி சூசையின் தோளுக்குத் தோள் தந்து நின்று பாடுபட்டு, மகளிர் கடலணியை வானுயரக் கட்டியெழுப்பிய அதன் முதற் சிறப்புத் தளபதிதான் லெப்ரினன்ற் கேணல் நளாயினி.

மகளிர் படையிலிருந்து கடற்புலிகளுக்கென வழங்கப்பட்ட 30 பேர்கொண்ட முதற் குழுவில் அவளோடு அங்கம் வகித்து, கடற்புலிகள் பெண்கள் படையணியின் மூலவேர்களுள் ஒன்றாக இயங்கி, அதனைத் திடகாத்திரத்தோடு வளர்த்தெடுக்க உரம்சேர்த்த இன்னொருத்திதான் மேஜர் மங்கை.

இந்து மா சமுத்திரத்தின் அலை மலைகளைத் தாவிக் கடந்து, தமிழீழப் பெண்ணினம் சாதனை படைக்கவென அல்லும் பகலும் அயராது உழைத்த அந்த மேனிகள், இப்போது ஓய்ந்துவிட்டன.

புதிய வரலாற்றின் அத்தியாயங்களாக...... புதிய வழித்தடத்தின் சுவடுகளாக......புதிய மாற்றமொன்றின் திறவுகோல்களாக அவர்கள் கடற் தாயோடு கலந்துவிட்டார்கள்.

விண்மீன்களை வைத்துத் திசையறியச் சொன்னதிலிருந்து, கடலோடிச்சென்று களமாடக் கற்றதுவரை, ஒன்றாகச் சோறு குழைத்து ஊட்டி வளர்த்தெடுத்து, எம்மை ஆளாக்கிவிட்ட அந்த ஆசான்கள்; ஆருயிர் நண்பிகள்; அன்புக்கினிய எங்கள் தளபதிகள் இனி வரமாட்டார்கள்.

ஓயாது மூசிவந்து கரைகளில் மோதி அறையும் அலைகளைப்போல - அவர்களது சுவடுகளில் ஆயிரமாயிரமாய் நாங்கள் தொடர்ந்து அணிவகுப்போம்......

கடற்புலிகளுக்கு வரும்போதே கரும்புலிகளாக வந்தவர்கள் அவர்கள்.

வந்ததன் பின்பு -

கரும்புலிக் காவியத்தைக் கடலிலேதான் படைக்கவேண்டும் என்பது ஒரு ஆக்ரோசமான வேட்கையாக அவர்களை ஆட்கொண்டது.

எதிரியை எதிர்கொண்ட ஒவ்வொரு கடற் சண்டைக் களத்திலும் மட்டுமல்ல, 'சாகரவர்த்தனா'வைச் சாகடித்தும் அவர்கள் அதனைத்தான் சாதித்துப் போனார்கள்.

'ஒப்பறேசன் தவளை'க்குப் படையெடுக்கும் வேளையில் பாமா சொல்லிவிட்டுப் போனவைகள், நளாயினியின் ஆழ்மனக் குகையில் பசுமையாய்த் தேங்கிக் கிடந்தன.

''தரைச் சண்டைகளில் நாங்கள் திறமையாகச் செயற்படவேண்டும்தான்; ஆனால் நாங்கள் கடற்சண்டைக்குரியவர்கள். நாங்கள் கடலிலே சாதிப்பது மட்டுமல்ல கடலிலேதான் சாகவும் வேண்டும். 'யாழ்தேவி'யில் சுகன்யாவை இழந்தது எங்கள் துரதிர்ஷ்டம். எனவே நீங்கள் திறமையாகச் சண்டையிட்டு கவனமாகத் திரும்பி வாருங்கள்.''

காவலரண் தொகுதி ஒன்றைத் தாக்கும் அணிக்குப் பொறுப்பாகச் சென்று, வெடிபட்டு மருத்துவமனைக் கட்டிலில் சுயநினைவற்றுக் கிடந்து, ''பாமா...... பாமா......'' என்று நளாயினி கத்திகொண்டேயிருக்க, பாமா எங்களைவிட்டும் அவளைவிட்டும் எட்டாத்தூரத்திற்குப் போய்விட்டாள்.

காங்கேசன்துறையில் கண்காணிப்பு - நிர்வாகக் கப்பலைத் தகர்க்க கடற் கரும்புலிகள் புறப்பட்டுப் போனபோது, தானும் போகமுடியவில்லையே என்ற ஆதங்கம் நளாயினிக்கு.

தன்னுடைய பிள்ளைகளுக்கு முன்பு தான் கரும்புலியாகப் போகவேண்டும் என்ற மன உணர்வோடு இருந்தவள்தானே அவள்.

திரும்பிவந்த தாக்குதல் அணிக்குள் அங்கயற்கண்ணி இல்லாததைக் காணநேர்கையில், அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

நளாயினி உண்மையிலேயே வித்தியாசமானவள்தான்.

சிந்திப்பில், செயற்பாட்டில், சுறுசுறுப்பில், நினைத்ததைச் செய்து முடிக்கும் உழைப்பில், அவள் எங்களைவிட மேலோங்கித்தான் நின்றாள்.

ஒரு மிதிவண்டிதானும் இல்லாமலிருந்த ஆரம்ப நாட்களில், மங்கையும் அவளும் ஒழுங்கைக்கு ஒழுங்கை நடையாய் நடந்தார்கள்.

வீதிவீதியாகத் திரிந்து, வீடுவீடாகக் கருத்துச் சொல்லி, புதிது புதிதாகப் பிள்ளைகளைச் சேர்த்து, கடற்புலிகள் மகளிர் அணியை உறுதியான ஒரு அத்திவாரத்தின்மீது அவர்கள் கட்டியெழுப்பினார்கள்.

பெரியபெரிய கனவுகளெல்லாம் அவர்களது நெஞ்சுக் கூட்டுக்குள் புதைந்து கிடந்தன.

''ஆண்போராளிகளின் துணையின்றி கடலில் நாங்கள் தனிச்சு சண்டை பிடிக்கவேணும்.''

தங்களது கனவுகளையெல்லாம் நனவாக்க அவர்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

நளாயினிக்கும் மங்கைக்கும் உள்ளே ஒரு வேட்கை குடிகொண்டிருந்ததை ஆரம்பத்திலிருந்தே நாங்கள் கண்டோம்.

''ஆண்போராளிகளுக்கு நிகராக அல்ல; அவர்களைவிட மிகையாக நாங்கள் செய்துகாட்ட வேண்டும் அவர்கள் சாதிப்பதைவிட அதிகமாக நாம் சாதிக்க வேண்டும்.''

இந்த வைராக்கியம்தான் அவர்களுக்குள் இருந்து அவர்களை இயக்கியது; எங்களையும் இயக்குவித்தது.

தமது சொல்லாலும் செயலாலும் எப்போதும் எங்களுக்கு உறுதியூட்டிக்கொண்டே இருந்தார்கள்.

அலை குமுறும்; ஆர்ப்பரித்தெழும்; கரைகளில் மூசி அடிக்கும்; 'பெரிய கடலாக' இருந்த கடலைப் பார்த்து அச்சப்பட்டு நின்றோம் நாங்கள்.

ஒவ்வொருத்தராய்க் கடலில் இறக்கி, மெல்ல மெல்லத் தவழவிட்டு, காலடித்து கையடித்து முக்குளித்து நிமிர்ந்த எங்களை திரும்பவும் தவழவிட்டு, மீன்களுக்கு இணையான நீச்சல்காரர்களாக உருவாககிவிட்டவர்கள் - அவர்கள்தான்.

உளம் தளராமல், மனம் குழம்பாமல், தனித்தனியாய்க்கூடக் கதைத்துத் தெளிவூட்டி அன்போடு எங்களை அரவணைத்து, நலவழிப்படுத்திய தளபதி அவள். போகும்போதுகூட எங்கள் மனங்களில் எந்தச் சந்தேகத்தையும் அவள் கேள்விக்குறியாக விட்டுவிட்டுப் போகவில்லை.

பூவரசங்குளம் சண்டையில் சன்னங்கள் துளையிட்ட ஆழமான வடுக்களைத் தாங்கியதால் நிறைவுகுறைந்து போயிருந்தது அவளது மேனி.

எவ்வளவோ எல்லாம் சாதிக்கவேண்டும் என்ற அவளின் உணர்வின் வேகத்திற்கு, அந்தப் புண்பட்ட உடலால் ஈடுகொடுத்து இயங்கமுடியவில்லை. பாவம்.

என்றாலும் நளாயினி ஓய்ந்தாளில்லை. தன்னுடைய சக்திக்கு மீறியும் அவள் செயற்பட்டாள். உடலை வருத்தி வருத்தித்தான் உழைத்தாள்.

கடற்புலிகள் மகளிர் படையணி குறுகிய காலத்தில் கண்ட இந்தப் பெருகிய வளர்ச்சியானது. அதனுடைய அடிவேரில் தன்னுடைய உயிரையே உருக்கிவார்த்த அவளது உழைப்பின் பெறுபேறு என்றுதான் சொல்ல வேண்டும்.

மேற்கில் –

இந்து மா சமுத்திரத்தின் தொடுவானத்தைச் செவ்வானமாக்கிவிட்டு, சூரிய தேவன் ஆபிரிக்காவுக்குப் போய்விடுகிற அந்திப்பொழுது.

கிழக்கு வானில் நிலவு நங்கை இரவு உணவுக்குப் புறப்படுவாள்.

வளர்பிறையாய்...... தேய்பிறையாய்...... முழுநிலவாய் அவள் வருவாள். சில நாட்களில் வராமலும் விடுவதுண்டு.

ஆனால் -

நளாயினி கடலுக்கு வராமல் ஒரு நாளும் விடாள்.

60நொட்ஸ் வேகத்தில் வீசும் கடற்காற்று சில்லிடும்.

நீர்ப்பதம் செறிந்த உவர்காற்றின் வருடலில் மேனி சிலிர்க்கும்.

அமைதியாக, அல்லது ஆர்ப்பரித்து அலைக்கரம் வீசி எங்கள் நீர் நங்கை நிலமகளோடு பாசம் பேசுவாள்.

உடலுறையும் அந்தக் குளிரில் நளாயினியும் மங்கையும் தோழிகளோடு கடலில் இறங்குவார்கள்.

பகலெல்லாம் எமக்குப் பயிற்சி தந்து ஓயாமல் இயங்குகின்ற அவர்கள், இரவான பின்னர்தான் - எம்மை ஓய்வாக உறங்கவிட்டு- தமக்காகப் பயிற்சி எடுக்கக் கடலுக்குப் போவார்கள்.

கடல்சார்ந்த எந்த அறிவும் இல்லாமல் தான் அவர்கள் கடற்புலிகளுக்கு வந்தார்கள். புதிய போராளிகளுக்குப் பயிற்சி வழங்கும் அதேவேளையில், கடலுக்கு அவர்களும் புதியவர்களே!

கனிந்து பழுத்த மீனவக் கிழவர்கள் கடலோரங்களில் குந்தியிருக்க, மெல்லக் கதை கொடுப்பாள் நளாயினி. பொக்கை வாய் திறந்து தன் வீரதீரங்களைப் பேசத் தொடங்கும்- கடல்பற்றி, கடலின் சுழிகளைப் பற்றி, நீரோட்டங்கள்பற்றி, நடுக்கடல் மர்மங்கள் பற்றி, ஆழ்கடல் இரகசியங்கள் பற்றி - கிழவர்களது முதிர்ந்த அறிவினை அவள் உறிஞ்சிக் கறப்பாள்.

பின்னர், அவற்றை எங்களுக்குப் பருகத் தருவாள்.

'' பிள்ளைகளுக்கு எதையும் சொல்லிக் கொடுக்க முன்னர் அதனை நாங்கள் தெரிந்திருக்க வேண்டும்'' என்று சொல்லுவதோடு நில்லாமல், அவர்கள் செய்யவும் முனைந்தார்கள்.



சிங்களப்படை புலிகளைத் தேடிய பார்வைச் சாதனம்; சாகரவர்த்தனாவில் கைப்பற்றப்பட்டது. இனிமேல் - சிங்களப் படையைப் புலிகள் தேடுவார்கள்.

மீன்களை வெல்லவேண்டுமென்று நளாயினிக்கு ஆசை திரண்ட அலைகளோடு போராடி அவள் வலிந்து நீந்துவாள்: கைகள் சோரும். உடலியக்க சக்தியின் கொள்ளளவு குறையவும் அவள் தொடர்ந்து முன்னேறுவாள்; கால்கள் சோரும். வலு இழந்த உடல், வலு நிறைந்த மனத்தோடு முரண்டு பிடிக்கும். மனந்தளராது நீந்திக் கடலலைகளை வெல்ல முயன்றும் முடியாமற்போய், உடல் துவண்டு களைத்தவளை, நாங்கள்தான் கரை சேர்த்தோம் பலதடவைகள்.

அவள் பாவம். எவ்வளவு சுமைகளைத்தான் தனியொருத்தியாக அவள் தாங்குவாள்?

நிர்வாகத்தைக் கவனித்தாள்; நிதியைக் கவனித்தாள்; படைகளைக் கவனித்தாள்;பயிற்சிகளையும் கவனித்தாள்; அரசியலையும் கவனித்தாள்; சண்டைகளையும கவனிததாள். எங்களது உணவைக கவனிதது, உடைகளையும் கவனித்ததோடு ஒவ்வொரு பிள்ளையின் உள்ளத்தையும் கவனித்தாள்.

எல்லா இடங்களிலும் தானே நின்றாள்; எல்லாப் பாரங்களையும் தானே சுமந்தாள்.

நளாயினியைப் பார்த்து நாங்களே பிரமித்திருக்கிறோம்.

எங்களது மகளிர் படையணி கடலில் வளர்ந்த ஒவ்வொரு துளிர்ப்பிலும் அவளது குருதியும் வியர்வையும்தான் கலந்திருக்கிறது.

அவளை எக்காலத்திலும் நாங்கள் மறக்கவே முடியாது.

பெண்கள் கடற்படையின் தோற்றமும் வளர்ச்சியும் அந்தத் தளபதியின் உயிரால் எழுதப்பட்ட வரலாறு.

வல்வெட்டித்துறையில் ஆறுமுகசாமி ஐயாவின் 8 செல்வங்களில் இவள் 6 ஆவது குழந்தை.

ஐந்தாண்டுகளுக்கு முன்பு கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு இயக்கத்திற்கு வந்தபோது - பெரிய வசதிகளைத் தூக்கி எறிந்து விட்டுத்தான் அவள் புறப்பட்டாள்.

வீட்டுக்குப் போயிருந்த ஒரு பௌர்ணமி நாளில் - முற்றத்தில் - அம்மாவின் மடியில் தலைசாய்த்துப் படுத்திருந்த பிள்ளையை ஆசையோடு வருடிவிட்ட அன்னையிடம் –

'' அக்காவுக்குப் பத்து இலட்சம் கொடுத்து கல்யாணம் செய்துவைச்சனீங்கள்தானே அம்மா, எனக்கு ஐந்து இலட்சம் தாங்கோ இயக்கத்துக்குக் குடுக்க '' என்றாளாம்.

மிகச் சரியானவளாய் இனங்கண்டு, கடற்புலிகளின் தொழில்நுட்பக் கல்லூரிக்கு மங்கையைப் பொறுப்பாக நியமித்தாள் நளாயினி.

சின்னப் பெண் குழந்தை. தத்தித் தவழ்ந்து மணல் அளைந்தது. அது வளர்ந்து பெரியவளாகிய பின்பு - தறை உழுது, நெல் விதைத்து, உரம் போட்டு, வயல்பார்த்து. அரிவி வெட்டி, சூடடித்து, மூடை கட்டி வீட்டுக்கு எடுத்து வந்து காசாக்குவதுவரை எல்லாவற்றையும் தானே செய்தது என்றால், எவரும் நம்பமாட்டார்கள்.

அப்படிப்பட்டவளின் கையில் தொழில் நுட்பக் கல்லூரி; நெல் மணிகள் குலுங்கும் வயல் சேனையாய் அது செழித்தது.

வடமராட்சியில் ஊரிக்காடு கிராமம். கணபதிப்பிள்ளை - சோதி தம்பதிகளின் 9 குழந்தைகளில் இரண்டேபேர்தான் பையன்கள், கடைசித் தங்கைக்கு நேர் மேலே மங்கை.

குடும்பத்தின் வறுமை, புத்திகூர்மையான அந்தக் குழந்தைக்கும் - பக்கத்திலேயே இருந்த பள்ளிக்கூடத்திற்கும் இடையில் வேலிபோட்டது.

தளர்ந்துபோகவில்லைத் தங்கை - அந்த இழப்பால் இளகிப் போகாமல் இறுகியது நெஞ்சம். குடும்பத்தின் துயரமும் அவளை உந்தித் தள்ளியது.

அவள் வெளியில் வந்தாள். ஆடவருக்கு நிகராக அன்னவளும் வயலில் இறங்கினாள். குடும்பத்தின் துன்பச் சிலுவைக்கு அந்தப் பெண்குழந்தையும் தோள் கொடுத்தது,

அவளது வியர்வை பாய்ந்து சேறாகி, வயலில் செழித்துக் குலுங்கிய நெல் மணிகள் அக்காவொருத்தியின் திருமணத்தின்போது கழுத்தில் சங்கிலியாய் மின்னியதுமுண்டாம்.

இப்போது அதைச் சொல்லிச் சொல்லித்தான் அம்மா அழுகிறாள்.

ஊருக்குள் யாருக்கும் உதவியென்றால் ஓடோடிச் சென்று ஒத்தாசை புரிந்துகொண்டிருந்தவள் - இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நாட்டுக்காய்ப் போராடப் புறப்பட்டு வந்தாள்.

அரசியல் பணியில் மக்கள் அரங்கத்திலும், படையியல் பணியில் யுத்த அரங்கத்திலும் கடமையாற்றிய அந்த வீராங்கனையை, கடற்புலிகளின் அணி அலைகளின் மடியில் களமாட அழைத்தது.

கடற்புலிகளின் ஆரம்ப நாட்களில் அரியாலையிலிருந்து அராலிவரையான கரையோரப் பிரதேசத்தில் மங்கைக்கு அரசியல் வேலை.

எங்கள் அன்புக்கினிய மக்களைப் பற்றியே அவள் எப்போதும் பேசிக்கொண்டிருந்தாள்.

அல்லல்படும் எம் மக்களது துன்பங்கள் தீரவேண்டும்; துயரப்படும் எம் மக்கள் நிம்மதியோடு வாழவேண்டும்; அடக்கப்பட்ட எம் மக்கள் சுதந்திரமாய் ஆளவேண்டும்.

ஆத்மார்த்தமான ஒரு தாகமாக அவளுக்குள் இவை ஊற்றெடுததைதை நாங்கள் அறிவோம்; இந்த உள்ளக்கிடக்கை சொல்லாகவும் செயலாகவும் அவளுக்குள்ளிருந்து வெளிப்பாடு கண்டது.

தட்டிக்கேட்க யாருமின்றி எம் மக்கள் நீட்டி நிமிர்ந்து படுக்கவேண்டுமானால், இம் மண்ணின் இளைய சந்ததி போராட்டத்தோடு அணி திரளவேண்டுமென்றாள்: யுத்தத்தில் கலந்து அதனை விரைவாக வென்றெடுக்கச் சொன்னாள்.

படிப்படியாக மங்கை பெற்ற வளர்ச்சி, எங்களுக்கு அபாரமானதாகத் தெரிந்தது.

ஐந்து கடல் மைல்களை நீந்திக் கடந்துவிட்டு வந்தவளுக்கு தலைவர் பரிசு வழங்கினார்.

ஆரம்பத்தில் எதுவும் தெரியாதவளாய் மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு திரிந்தாள்; நாளடைவில் எல்லாம் தெரிந்த அவளிடம் மற்றவர்கள் கேட்டுத் தெரிந்துகொண்டு திரிந்தார்கள்.

யுத்தப்புயல் கிளாலிக் கடற்பரப்பில் மையம் கொண்டிருந்த வரலாற்றுக் காலத்தில், அலை கிழித்து விரைந்து பொறி கக்கிப் பகை விரட்டும் விசைப்படகுகளில் அவள் ஓட்டி, பின்பு சண்டைக்காரி, அடுத்து படகுத் தளபதி.

யாழ். நீரேரியிலிருந்த கடற் போர்க்களம் படிப்படியாக விரிவாக்கம் கண்டு பெருங்கடலில் படர்ந்தபோது எழுந்த தேவையின்